Registered as a news paper.    பக்கங்கள்: பன்னிரண்டு    விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

WESTERN UNION® பணப் பரிமாற்றம்
மூலம் உலகின் எப்பாகத்தில்
இருந்தும் பணத்தை விரைவாக
பெற்றுக் கொள்ள நல்லூரில்...
சந்தியா மல்ரி கோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 23 (12.07.2004) திங்கட்கிழமை இதழ்:283

# சமாதான முயற்சிகளில் நோர்வே; மீண்டும் ஈடுபட அரசு கோரிக்கை!

## சொல்ஹெய்ம் விரைவில் கொழும்பு வருவார்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுடன் மீளவும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கும் –**

**நாட்டில் ஏற்பட்டிருக்கும் இயல்பற்ற சூழ்நிலைகளை சுமுகமாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விரைவில் கொழும்புக்கு வரவிருப்பதாகத் தெரியவருகிறது.**

சமாதான முயற்சி குறித்து கலந்துரையாட வருமாறு நோர்வேயின் சமாதான ஏற்பாட்டுக் குழுவிடம் அரசாங்கத் தரப்பிலிருந்து கோரிக்கை விடப்பட்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகாவின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்த நிலையில் அடுத்த கட்டமாக சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருப்பதாகவும்

இதன் அடிப்படையிலேயே இந்தக் கோரிக்கை விடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அரச தரப்பின் இந்த அறிவிப்பை அடுத்து எரிக் சொல்ஹெய்ம விரைவில் இலங்கை வருவார் என்றும், எனினும் இவரது விஜயம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 6 மாகாணங்களின் ஆட்சியையும் ஆளும் கட்சியே கைப்பற்றியது!

(கொழும்பு)

ஆறு மாகாண சபைகளுக்கு நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று வெளியாகிய உத்தியோகபூர்வ முடிவுகளின்படி ஆறு மாகாணங்களின் ஆட்சியை ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனித்துக் கைப் பற்றியுள்ளது.

ஊவா, சப்பிரகமுவ, வடமத்திய, தென்மாகாண சபைகளின் நிர்வாகம் ஏற்கனவே பொதுஜன ஐக்கிய முன்னணியின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

தற்போது இது மீண்டும் ஐக்கிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு விபத்தில் இளைஞர் உயிரிழப்பு!

(கிளிநொச்சி)

ஏ-9 வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் பலியானதுடன், இன்னொருவர் படுகாயமடைந்தார்.

ஆனையிறவுக்கும் பரந்தன் சந்திக்கும் இடைப்பட்ட வீதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற லொறியுடன், கிளிநொச்சியிலிருந்து மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்தவர்கள் விபத்துக்குள்ளானதாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் சென்ற கிளிநொச்சி - திருநகரைச் சேர்ந்த தேவராசா உதயகுமார் (வயது - 29) என்பவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இவருடன் பயணித்தவரான கந்தசாமி அசோக்குமார் (வயது - 29) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புறூவ் ஹொவ்டே - தமிழ்ச்செல்வன் நேற்று கிளிநொச்சியில் திடீர் சந்திப்பு!

(கிளிநொச்சி)

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டே நேற்று கிளிநொச்சிக்குத் திடீர் விஜயத்தினை மேற்கொண்டு புலிகளுடன் பேச்சுக்களை நடத்தினார்.

விமானப் படை ஹெலிகொப்ரர் மூலம் கிளிநொச்சி மைதானத்தை வந்தடைந்த புறூவ் ஹொவ்டே தலைமையிலான இரண்டு கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தனர்.



நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் -

போர் நிறுத்த உடன்பாட்டு அம்சங்கள், மட்டக்களப்பு - அம்பாறையில் இடம்பெறும் சம்பவங்கள், பொதுவான அரசியல் நிலைவரம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை!

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இன்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்து நேரடியாக ஆராயவே இவர் இங்கு விஜயம் செய்ய விருப்பதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

பலாலிப் படைத்தளத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரை யாழ். குடாநாட்டுக்கான படைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவும், மூத்த படைத் தளபதிகளும் வரவேற்பர்.

பின்னர் இவர் பலாலியில் நடைபெறும் உயர்மட்ட பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்வார். இதில் குடாநாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆராயப்படவிருக்கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி அலுவலகம் மீது வாழைச்சேனையில் சூடு!

(மட்டக்கப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனைப் பகுதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி அலுவலகம் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலை அடுத்து ஈ.பி.டி.பி அலுவலகத்திலிருந்தும் பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது.

இரு தரப்பினருக்கும் இடையில் சுமார் நான்கு நிமிடநேரம் துப்பாக்கிச் சண்டை நடந்ததாக வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கந்தரோடை விபத்தில் இளைஞர் மரணம்

(கந்தரோடை)

கந்தரோடைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் லொறி விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த இளைஞர் மரணமடைந்துள்ளார்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயாப் பாடசாலைக்கு முன் இடம்பெற்ற இந்த விபத்தில் பரமசிவம் றஜீபன் (வயது 22 ) என்பவரே உயிரிழந்தவராவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அரசாங்கமும் படைத்தரப்பும்

## யுத்த நெருக்கடியினை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன!

### தமிழ்ச்செல்வன் பி.பி.சிக்குத் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தற்போதுள்ள அரசாங்கமும் படைத்தரப்பும் - கடந்த இரண்டு வருடங்களாக கட்டி எழுப்பிய நம்பிக்கையைச் சீர்குலைத்து, மீண்டும் யுத்த நெருக்கடியை நோக்கி தள்ளிக் கொண்டிருப்பதையே அண்மைக்கால நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுவதாக

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செயதியாளர் பிரான்சிஸ் ஹரிசனுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் அளித்த பேட்டியில் மேலும் குறிப்பிட்டதாவது-.

படைத்தரப்பின் மறைமுக ஆதரவோடு முன் எடுக்கப்படுகின்ற படு கொலைகள் சீர்குலைவு நடவடிக்கைகள் - குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது மக்கள் மீதான படுகொலையை(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பை பலப்படுத்த கோருகிறார் டக்ளஸ்!

(கொழும்பு)

தனது பாதுகாப்பைப் பலப்படுத்துமாறும் - இந்த விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா நேரடியாகத் தலையிட வேண்டும் என்றும் ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளரும், அமைசசருமான டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இது தொடர்பாக அமைச்சர் டகளஸ் தேவானந்தா கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# மாகாண சபைத் தேர்தல் - 2004 மாவட்ட முடிவுகள்

## மத்திய மாகாணம்

### நுவரெலியா மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க | 1 38 572 | 50.88% | 8 |
| ஐ.ம.சு.மு | 89 192 | 32.75% | 6 |
| ம.ம.மு | 36 939 | 13.56% | 2 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 4 36 230
செல்லுபடியான வாக்குகள் - 2 72 327

### கண்டி மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 2 44 595 | 54.17% | 16 |
| ஐ.தே.க | 2 02 264 | 44.80% | 14 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 8 95 305
செல்லுபடியான வாக்குகள் - 4 51 518

### மாத்தளை மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 92 510 | 56.12% | 6 |
| ஐ.தே.க | 69 309 | 42.04% | 4 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 3 19 027
செல்லுபடியான வாக்குகள் - 1 64 857

## மேல் மாகாணம்

### கொழும்பு மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 3 22 653 | 49.11% | 21 |
| ஐ.தே.க | 2 76 259 | 42.12% | 18 |
| மு.காங்கிரஸ் | 31 184 | 4.75% | 2 |
| மே.ம.மு | 12 219 | 1.86% | 1 |
| ஜ.ஐ.மு | 6 219 | 0.95% | 1 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 14 67 761
செல்லுபடியான வாக்குகள் - 6 57 000

### களுத்துறை

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 2 24 914 | 57.27% | 12 |
| ஐ.தே.க | 1 41 336 | 35.99% | 7 |
| மு.காங்கிரஸ் | 22 926 | 05.84% | 1 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 7 54 175
செல்லுபடியான வாக்குகள் - 3 92 698

### கம்பஹா மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 3 92 881 | 61.33% | 24 |
| ஐ.தே.க | 2 18 903 | 34.19% | 14 |
| மு.காங்கிரஸ் | 16 621 | 2.60% | 01 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 13 38 567
செல்லுபடியான வாக்குகள் - 6 40 346

## சப்பிரகமுவ மாகாணம்

### கேகாலை மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 1 25 112 | 58.90% | 11 |
| ஐ.தே.க | 1 15 551 | 36.77% | 07 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 5 70 299
செல்லுபடியான வாக்குகள் - 3 14 296

### இரத்தினபுரி மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 2 13 619 | 61.07% | 15 |
| ஐ.தே.க | 1 19 681 | 34.22% | 08 |
| இ.தொ.கா | 6 425 | 01.84% | 01 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 6 51 565
செல்லுபடியான வாக்குகள் - 3 49 784

## ஊவா மாகாணம்

### மொனராகல மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 97 878 | 66.24% | 07 |
| ஐ.தே.க | 48930 | 33.12% | 04 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 2 68 434
செல்லுபடியான வாக்குகள் - 1 47 253

### பதுளை மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 1 69 197 | 55.48% | 12 |
| ஐ.தே.க | 1 19 171 | 39.08% | 08 |
| ம.ம.மு | 12 759 | 4.18% | 01 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 5 20 229
செல்லுபடியான வாக்குகள் - 3 04 959

## வட மத்திய மாகாணம்

### அநுராதபுரம் மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 1 87 971 | 63.91% | 14 |
| ஐ.தே.க | 89 166 | 30.32% | 6 |
| மு.காங்கிரஸ் | 14 391 | 4.89% | 1 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 5 29 307
செல்லுபடியான வாக்குகள் - 2 94 091

### பொலனறுவ மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 91 067 | 62.19% | 6 |
| ஐ.தே.க | 54 534 | 32.24% | 4 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 2 57 606
செல்லுபடியான வாக்குகள் - 1 46 433

## தென் மாகாணம்

### காலி மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 2 38 235 | 62.50% | 14 |
| ஐ.தே.க | 1 34 868 | 36.51% | 9 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 7 27 590
செல்லுபடியான வாக்குகள் - 3 81 228

### அம்பாந்தோட்டை மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 1 41 283 | 70.12% | 8 |
| ஐ.தே.க | 58 327 | 28.95% | 4 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 3 89 344
செல்லுபடியான வாக்குகள் - 2 01 496

### மாத்தறை மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 1 22 076 | 64.30% | 12 |
| ஐ.தே.க | 94 448 | 33.35% | 6 |

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 5 59 273
செல்லுபடியான வாக்குகள் - 2 83 198

## மாகாணசபைத் தேர்தல் - 2004

### தபால் மூல வாக்குகள்

| | | |
|---|---|---|
| காலி | 6 524 | 2 977 |
| அம்பாந்தோட்டை | 3 351 | 1 229 |
| மாத்தறை | 4 977 | 1 966 |
| பதுளை | 5 860 | 2 228 |
| மொனராகல | 3 567 | 1 637 |
| இரத்தினபுரி | 2 812 | 1 331 |
| கேகாலை | 5 481 | 2 602 |
| மாத்தளை | 3 814 | 2 014 |
| மகாநுவர (கண்டி) | 8 140 | 4 935 |
| நுவரெலியா | 2 066 | 1 344 |
| அநுராதபுரம் | 9 070 | 4 307 |
| பொலனறுவ | 2 238 | 961 |
| கொழும்பு | 4 514 | 2 153 |
| க ளுத்துறை | 5 022 | 2 189 |
| கம்பஹா | 7 285 | 2 830 |

# உடல் நலன் கருதியே மருத்துவபீட மாணவியின் உண்ணாவிரதத்தைக் கைவிடக் கோரினோம்!

## மருத்துவபீட மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி புஸ்பமாலாவின் உடல் நிலை பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவே, அவர் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுமாறு கோரினோமே தவிர, அவரது கோரிக்கையை ஏற்றுக் கொள்வதற்காக அல்ல.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவியான செல்வி சி.புஸ்பமாலா, கடந்த வாரம் - தான் நிர்வாகத்தால் பழிவாங்கப்பட்டதாகத் தெரிவித்து தனக்கு நீதி வேண்டும் எனக் கோரி ஐந்து கோரிக்கைகளை முன் வைத்திருந்தார். அவற்றை பல்கலைக் கழக நிர்வாகம் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தே அவரது போராட்டம் கைவிடச்செய்யப்பட்டிருந்தது.

எனினும், இவ்விடயம் தொடர்பாக நேற்றுமாலை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் நடத்திய விசேட கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த முடிவு அறிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

செல்வி கி.புஸ்பமாலாவின் உண்ணாவிரதப் போராட்டம் சம்பந்தமாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளில் சில தெளிவின்மை காணப் பட்டது. ஆகவே இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு-

கடந்த 7 ஆம் திகதி செல்வி கி.புஸ்பமாலாவிடம் உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி தயவுடன் கேட்டுக்கொண்டதுடன், இந்த முரண்பாடுகள் சம்பந்தமாக சுமுகமான தீர்வு ஏற்படும்வரை எமது விரிவுரைகளை பகிஷ்கரிப்பதாகவும் முடிவெடுத்தோம். இது மனிதாபிமான ரீதியாக அவருடைய உடல்நிலை பாதிப்படையக் கூடாது என்பதற்காக மட்டுமே எடுக்கப்பட்ட முடிவாகும். அதை விடுத்து அவருடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்

மருத்துவபீட மாணவர் ஒன்றியம் அவருடைய கோரிக்கையை இயன்றளவு கவனத்தில் எடுத்து செயற்பட்டது என்பதையும் ஒன்றியம் நிச்சயமாக மாணவர்களது நலனுக்காக செயற்படும் எனவும் தெரிவித்துள்ளது.

பொதுக்கூட்டத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அன்றி எதிர்காலத்தில் உண்ணாவிரதம் இருப்பதை மருத்துவ மாணவர் ஒன்றியம் ஏற்றுக்கொள்ளமாட்டாது.

பரீட்சை சம்பந்தமாக வினாத் தாள்களை மீள்திருத்தம் செய்வது தொடர்பாக எல்லா மாணவர்களையும் திருப்திப்படுத்தமுடியாது என்பதால், ஒன்றியம் எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற விடயங்களில் தலையிடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# காலாவதியான பொருட்கள் விற்கும் வர்த்தகர்கள் பற்றிய விபரம் தருக!

## வணிக கட்டுப்பாட்டு பிரிவு கோரிக்கை

காலாவதியான பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் பற்றித் தகவல் தந்து உதவுமாறு பொதுமக்களிடம் தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டு பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலங்களாக மருந்தகங்கள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றிலிருந்து ஏராளமான காலாவதியான மருந்து, பால்மா, பிஸ்கட் முதலியன கண்டுபிடிக்கப்பட்டு எம்மால் அழிக் கப்பட்டுள்ளன.

நெல்லியடி, கரவெட்டி, துன்னாலை பகுதிகளில் இருந்து ஏராளமான காலாவதியான பொருட்கள் நேற்று கண்பிடிக்கப்பட்டு அழிக்கப் பட்டன.

இவ்வாறு காலாவதியான பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள், மருந்தகங்கள் முதலானவற்றைக் கண்டுபிடிக்க பொது மக்கள் உதவுதல் வேண்டும். அவ்வாறு தகவல்கள் ஏதும் கிடைத்தால் எமது நேரில் வந்தோ அல்லது 222 7594 என்னும் தொலைபேசியூடாக தொடர்புகொண்டோ தகவல் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவித்துள்ளனர்.

## பொது இடங்களில் மரக்கன்றுகள் நடுகை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேசசபை என்பவற்றுக்கு உள்ளூராட்சி உதவியாளர் அலுவலகத்தினால் தலா 20 மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை பொது இடங்களில் நாட்டப்படவுள்ளன. (29)

## வருடாந்த பொதுக்கூட்டம்

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளைமறுதினம் மாலை 6 மணிக்கு கொழும்பு ரண்முத்து ஹோட்டலில் நடைபெறவுள்ளது.


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

'குருவளை' அளவெட்டி தெற்கில் வீட்டுடன் 8 பரப்பு காணி (100பனை+தென்னை) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:0776309947.

நாகம்ஸ் சுன்னாகம்
இன்றுமுதல்
விஜய், சிம்ரன் நடித்த





துள்ளாத மனமும் துள்ளும்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த





கில்லி
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி, ஞாயிறு இரவு8.45(பு.நே)
"SHE"
(சி-2723)

ராஜா யாழ்ப்பாணம்.
அர்ஜுன, அபிராமி, மணிவண்ணன், பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்த





(சி-2725)
வானவில்
காட்சிநேரம்:-10.30,2.30, 6.30 (பு.நே)
14.07.2004 முதல் புதிய வெளியீடு
மானஸ்தன்

பொதுசன நூலகம்

## கைதுசெய்யப்பட்ட பெண்

# இரண்டு அடையாள அட்டைகளை பயன்படுத்தி வந்ததாக தெரிவிப்பு

### விசாரணையில் தகவல்

(கொழும்பு)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொலைசெய்யும் நோக்கில் வந்த தற்கொலைக் குண்டுதாரிக்கு உதவியதாகக் கூறப்படும் சத்யா என்ற பெண், முன்னர் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவில் இருந்தவரெனவும், அவர் கொழும்பில் இரண்டு பெயர்களுடன் இருந்ததாகவும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்திருப்பதாக, கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

செல்வராசா சத்தியலீலா மற்றும் செல்வராணி ஆகிய பெயர்களில் இரண்டு அடையாள அட்டைகளை இவர் பாவித்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்குச் செல்வராணி என்ற பெயருடன் சென்றார் என்றும், சிரேஷ்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இவர் நயினாதீவு ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர் ஆவார். சில வருடங்களுக்கு முன்னர் இவர் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவில் இருந்துள்ளார் என்றும், விசாரணை உத்தியோகத்தர்கள் கண்டுபிடித்துள்ளனராம்.

தற்போது வெளியாகியுள்ள விபரங்களின்படி, கொள்ளுப்பிட்டிச் சம்பவத்தில் இறந்துபோன தற்கொலைக் குண்டுதாரியை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அழைத்துவந்தவர் இந்தச் சத்தியா எனவும், விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (தே)

## விகாரையில் தங்கியிருந்தோர்

# கேணல் ரமேஷை கொல்ல திட்டமிட்டு இருந்தனராம்!

### திவயின பத்திரிகை தகவல்

ஹிங்குராங்கொட விகாரையில் தங்கியிருந்த கருணா குழுவைச் சேர்ந்த 14 பேரும், புலிகளின் கிழக்குத் தளபதி ரமேஷை கொல்வதற்குச் செல்லவிருந்த வேளையிலேயே பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக, திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற கரும்புலிகள் தின நிகழ்வில் கலந்துவிட்டு திரும்பிச்செல்லும் வழியிலேயே தளபதி கேணல் ரமேஷை தாக்குவதே இவர்களின் திட்டமாக இருந்தது.

ஆனால், பொலிஸார் இவர்களைக் கைது செய்ததால் அவர்களது திட்டம் முழுவதும் பயனற்றுப் போயுள்ளதாகவும்-

அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (தே)

# சமாதானத்தை ஏற்படுத்துவதில் இராணுவத்துக்கு முக்கிய பங்கு!

### சாந்த கொட்டேகொட கூறுகிறார்

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் இராணுவத்தினருக்குப் பொறுப்பான பங்குள்ளதென, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்தகொட்டேகொட தெரிவித்தார்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேல் நீடித்த யுத்தத்தின் பின்னர், இருதரப்பும் பேச்சுக்களின் மூலமே நிரந்தர சமாதானத்தை எட்டமுடியும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

இந்த நிலையில் சமாதான முயற்சிக் காலத்தில் ஏற்படும் மிகச் சிறிய பிழைகள்கூட, மிகப்பெரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தலாம். இன்றைய நிலையில் நாட்டு மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு முடிவுகளை எடுக்கவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு உள்ளது.

இராணுவத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒரே குழுவாக தலைமையின் உத்தரவுக்கு அமைய - அர்ப்பணிப்புடனும், கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளவேண்டும் எனவும்,



இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொட கேட்டுக்கொண்டார்.

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு இந்தமாத முடிவில் நியமனம்

அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் இந்த மாதமுடிவிற்குள் நியமனக்கடிதங்கள் வழங்கப்படுமென திறைசேரிச் செயலர் கலாநிதி ரி.டி. ஜயசுந்தர தெரிவித்தார்.

அரசின் பட்டதாரிப் பயிற்சியாளர்களாக முதலில் சேர்த்துக்கொள்ளப்படும் இவர்கள், இரண்டு வருட பயிற்சிக்காலத்துக்கு உட்படுவார்கள். இந்தப் பயிற்சியின் பின், அரசசேவையின் நிரந்தர நியமனத்தில் சேர்த்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்பொழுது அரசினால் செயற்படுத்தப்பட்டுள்ள வேலையற்றபட்டதாரிகளுக்கான தொழில் வழங்கல் திட்டம், முழுமையாக சட்டப்படியானது. எனவே, மீளவும் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டிய அவசியம் இல்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலை அனுமதிக்கு அன்பளிப்பு பெறக்கூடாது

அரசாங்கப் பாடசாலைகளில் ஆண்டு ஒன்று வகுப்புக்கு, பிள்ளைகளை சேர்த்துக் கொள்வதற்கு நிதி அன்பளிப்பு அல்லது வேறுவிதமான அன்பளிப்புக்களை கோருவது சட்டவிரோதமானது என்று கல்வி அமைச்சு வலியுறுத்தி உள்ளது.

இத்தகைய குற்றச்செயல்கள் புரியும் பாடசாலை அதிபர்களுக்கு எதிராக கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

வசதிக்கட்டணத்தையும், பாடசாலை அபிவிருத்தி சபைகளுக்கான கொடுப்பனவுகளையும் தவிர, ஏனைய எந்தவிதக் கொடுப்பனவையும் பெற்றோர் வழங்கக்கூடாது என்று அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

### பாடசாலை நேரத்தில்

# பிரத்தியேக வகுப்புகளை நடத்தும் ஆசிரியர் மீது கடும் நடவடிக்கை

பாடசாலை நேரத்தில் தனிப்பட்ட பிரத்தியேக வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர்களுக்கு எதிராக கடுமையான ஒழுங்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை கல்வி அமைச்சின் மேலதிக செயலர் இந்திராணி காரியவசம் அனுப்பி வைத்துள்ளார்.

பல ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தில் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துவதாகவும், இவ்வாறான வகுப்புக்களுக்கு பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலை நேரத்தில் செல்வதாகவும், கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான ஆசிரியர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது. மேலும், பாடசாலையில் மாணவர்கள் வரவு குறித்து கவனம் செலுத்துவதோடு, 80 சதவீத வரவினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்குமாறு கல்வி அமைச்சினால் அதிபர்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

# தனியார் பஸ்ஸில் பயணம் செய்த ஏழு தமிழ் இளைஞர்கள் கைது

ஹற்றனிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸில் பயணம் செய்த தமிழ் இளைஞர்கள் ஏழு பேரை முல்லேரியா பொலிசார் கைது செய்திருக்கின்றனர்.

அம்பத்தனை நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு முன்னால் வீதித் தடையை ஏற்படுத்தி வாகனங்களை சோதனை நடத்திய பொலிஸாரே இந்த இளைஞர்களை கைது செய்திருக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவரிடம் இருந்து ரி-56 ரக தன்னியக்க துப்பாக்கியொன்றையும் மூன்று கிரனைட்டுக்களையும் கைப் பற்றியதாக முல்லேரியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கமல் புஷ்பகுமார தெரிவித்தார்

சந்தேகத்திற்குரியவர் பெரிய போரதீவைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸ் அதிகாரி கமல் புஷ்பகுமார மேலும் தெரிவித்திருக்கின்றார்.

இந்த சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பொலிசாரும் தனியான விசாரணையை நடத்தி வருகின்றனர்.

# தேர்தல் வன்முறைகளில் ஒருவர் பலி; இருவர் காயம்!

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாகாணசபை தேர்தல் வாக்கெடுப்பு வன்முறையில் ஒருவர் பலியானதுடன், மேலும் இருவர் காயமடைந்தனர் .

ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

இந்தத் தேர்தல் வாக்கெடுப்பின்போது, மாத்தறையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் வன்முறையின்போது துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்தனர். ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கு இடையிலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலேயே இவர்கள் இருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

# புதிய அரசின் முதலாவது சட்டம் விரைவில் நாடாளுமன்றத்தில்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும் முதலாவது சட்டம், கையூட்டு மற்றும் ஊழல்களுக்கு எதிரான சட்டமாகும்.

எதிர்வரும் 20ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இந்தச் சட்டத்தை சமர்ப்பிப்பதற்கு அரசு எதிர்பார்க்கிறது.

இந்தச் சட்டம் ஐக்கிய நாடுகள் நீதிச் சட்டத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, பொதுச் சொத்துக்களைத் தவறான முறையில் பயன்படுத்தும் மற்றும் பணமோசடி செய்யும் எந்த ஒருவரையும் கைது செய்வதற்கும் தண்டனை வழங்குவதற்கும் இந்தப் புதிய சட்டம் உதவும் என அமைச்சர் அனுரகுமார திஸநாயக்கா தெரிவித்தார். (தே)



வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரிய நிலையங்கள் இணைந்து நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்திய ஆசிரியர் வாண்மை விருத்தி செயலமர்வில் கலந்துகொண்டவர்களை படத்தில் காணலாம்.

## தமிழர் விழாவுக்கு

# கனடாவிலிருந்து சென்ற தமிழர்கள் அமெரிக்காவுக்குள் நுழையத் தடை!

அமெரிக்காவில் அண்மையில் இடம்பெற்ற தமிழர் விழாவில் கலந்து கொள்வதற்காக கனடாவில் இருந்து சென்ற ஈழத்தமிழர்கள் அமெரிக்க - கனேடிய எல்லையில் வைத்து அமெரிக்கா அதிகாரிகளினால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

அமெரிக்காவின் போல்ரிமோர் மாநிலத்தில் இந்த மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகி 5ஆம் திகதி வரை 17ஆவது தமிழர் விழா சிறப்பாக நடைபெற்றது.

வழமைபோல் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காகச் சென்ற கனடியத் தமிழர்கள் பலரே இவ்வாறு எல்லையில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவர்கள் இவ்வாறு மீள அனுப்பப்பட்டமைக்கு தகுந்த காரணங்கள் அமெரிக்கா அதிகாரிகளினால் வழங்கப்படாத நிலையில் கனடிய மற்றும் அமெரிக்கத் தமிழ் அமைப்புக்கள் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்தனர்.

கனடாவில் அண்மையில் வெளிநாட்டப்பட்ட நீதிமன்ற தீர்ப்புக்கள் பொதுமக்களின் உரிமைகளை வலியுறுத்தியிருந்த போதிலும் அமெரிக்க அதிகாரிகளின் இந்த நடவடிக்கை குறித்து கனடியத் தமிழர்கள் கடும் விசனம் வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வாறு திருப்பி அனுப்பபட்டவர்களில் பலர் நீண்ட காலமாக கனடாவில் வாழும் தமிழர்கள் என்பதும் அவர்கள் கனடியக் குடியுரிமை பெற்றவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# சிறுமியை காணவில்லை

யாழ். நகரப்பகுதியில் பாடசாலைக்குச் சென்ற மாணவி ஒருவர் இரண்டு தினங்களாகக் வீடு திரும்பவில்லையென அவரது தயார் யாழ். பொலிஸ் நிலைய சிறு குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

எட்டனி வீதியைச் சேர்ந்த 12 வயதான ஜெனட் கரோலின் சுகன்யா என்ற சிறுமியையே காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாகவது - பாடசாலை செல்வதாகக் கூறிவிட்டு பாடசாலை சென்ற சிறுமி வீடு திரும்பவில்லை. இவர் தான் இனிமேல் வீட்டிற்கு வரமாட்டேன் என எழுதிய கடிதம் ஒன்று வீட்டில் இருந்து எடுக்கப்பட்டதாகவும், தமது உறவினர்கள் வீடுகளிலும் தேடி சிறுமியைக் காணவில்லையெனவும் இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளத

# அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் உறுதியான நிலையில் இலங்கை!

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்போட்டியின் மூன்றாவது நாளான நேற்று இலங்கை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 411 ஓட்டங்களைப்பெற்று வலுவான நிலையை அடைந்தது.

இரண்டு விக்கெட் இழப்புக்கு 184 ஓட்டங்கள் என்ற நிலையில் இரண்டாவது நாள் ஆட்ட முடிவில் இருந்த இலங்கை அணி நேற்று தொடர்ந்து விளையாடியது.

நேற்றைய போட்டிகளில் இலங்கை அணி வீரர்கள் நின்று பிடித்து ஆடியதால் - அவுஸ்ரேலியப் பந்து வீச்சாளர்களால் இலகுவில் விக்கெட்டுக்களை வீழ்த்த முடியாது போனது.

நேற்றைய போட்டியில் அணித்தலைவர் அத்தப்பத்து 133 ஓட்டங்களைக் குவித்தார். இது இவர் அடித்த 15 ஆவது டெஸ்ட் சதமாகும். 268 .பந்துகளில் 19 பவுண்டரிகளுடன் இவர் 133 ஓட்டங்களைப் பெற்றார்.

ஜெயவர்த்தனா 43 ஓட்டங்களையும், டில்சான் 35 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில், சமரவீர ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும், களுவிதாரண ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

நேற்றைய ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி சார்பில் பந்து வீச்சில் மக்ரா, கஸ்பரோவிச், வோன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

நேற்றய ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 5 விக்கெட் இழப்புக்கு 411 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஏற்கனவே அவுஸ்ரேலிய அணி முதல்



இனிங்ஸில் 517 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஏ.பி.சி.லீக் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4.15 மணியளவில் நடைபெறும்.

'பி' பிரிவு ஆட்டத்தில்

செண்மேரிஸ் 'பி' அணியை எதிர்த்து சென் அன்ரனிஸ் 'பி' அணி மோதும்.

இன்று பிற்பகல் 5.15 மணிக்கு 'ஏ' பிரிவில் சென்.மேரிஸ் 'ஏ' அணியை எதிர்த்து சென்.றொக்ஸ் 'ஏ' அணி மோதும்.

## ஹொக்கி போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் ஹொக்கி சுற்றுப் போட்டியில் இன்று பி.பகல் 4 மணிக்கு கிறாஸ் கொப்பர்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாண கல்லூரி அணியும் -

பி.பகல் 5 மணிக்கு கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விஞ்ஞான விளையாட்டு அணியும் மோதவுள்ளன.

# நட்வெஸ்ட் இறுதிப்போட்டி; நியூஸிலாந்து அபார வெற்றி

இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற - முத்தரப்பு நட்வெஸ்ட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை 107 ஓட்டங்களால் வென்று நியூஸிலாந்து சாதனை படைத்தது.

நட்வெஸ்ட் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நியூஸிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி நியூஸிலாந்தைத் துடுபபெடுத்தாட அழைத்தது.

நியூஸிலாந்து ஆட்டக்காரர்களின் அபார ஆட்டத்தால் - 266 ஓட்டங்களைப் பெற்று 49.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் அணித் தலைவர் பிளெமிங் 67, அஸ்லே 57, மார்ஷல் 44, மக்மிலன் 52 ஓட்டங்களைப் பெற்று வலுப்படுத்தியிருந்தனர்.

அத்துடன் உதிரி ஓட்டங்களாக 18 ஓட்டங்களை மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சாளர்கள் கொடுத்தனர்.

பெஸ்ட் - 2, சிமித் - 1, பிராவோ - 2, கைல் - 1, சர்வான் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனையடுத்துப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 159 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 107 ஓட்டங்களால் தோல்வி கண்டது.



இந்த அணி சார்பில் சிமித் 44, சர்வான் 19, லாறா - 30, சந்தர்போல் 31, பவில் 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் நியூஸிலாந்து வீரா விற்றோரி 5 விக்கெட்டுக்களை வீழ்தினார்.

# ஒலிம்பிக் போட்டிக்கான பாதுகாப்பு; அமெரிக்க அரசு அதிக அக்கறை

ஏதென்ஸ் - ஒலிம்பிக் பாதுகாப்பு நடவடிக்கைகளில் போட்டியை நடத்தும் நாடு கிறீஸைவிட, அமெரிக்கா அதிக அக்கறை செலுத்துகிறது. நேட்டோ கூட்டமைப்புப் படைகளைக் கொண்டுவந்து நிறுத்தவேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கிறது.

கிறீஸ் தலைநகர் ஏதென்ஸில் அடுத்த மாதம் 13 முதல் 29 ஆம் திகதிவரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. அமெரிக்கத் தாக்குதல், ஈராக்போர் ஆகிய சம்பவங்களுக்குப் பிறகு நடக்கும் முதல் போட்டி என்பதால் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகிறது.

ஆகவே பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிக்க அமெரிக்கா தலைமையில் பல்வேறு ஐரோப்பிய நாடுகள் அடங்கிய ஒரு குழுவே இயங்கிவருகிறது.

கிறஸ் நாடும் பாதுகாப்புக்காக மட்டும் பல ஆயிரம் கோடிகளைக் கொட்டியுள்ளது. ஆனாலும் திருப்தியில்லை அமெரிக்காவுக்கு பாதுகாப்பு பணியில் நேட்டோ கூட்டமைப்பு படையை ஈடுபடுத்த அது ஆர்வம் செலுத்துகிறது.

போட்டி நடக்கும்போது மத்தியதரைக் கடல் பகுதியிலிருந்து கண்காணிப்பு பணியிலீடுபட நேட்டோ கூட்டமைப்புத் திட்டமிட்டிருந்தது.

தீவிரவாத முறியடிப்பில் விசேட திறமை பெற்ற நேட்டோ கொமாண்டோ வீரர்கள் போட்டி நடக்கும் போது பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டால் தான் நன்றாக இருக்கும் என்று அமெரிக்கா விரும்புகிறது. நேட்டோ கூட்டமைப்பு அதிகாரிகளிடம் பேசி பாதுகாப்பு கேட்குமாறு கிரீஸ் நாட்டுக்கான தனது தூதர் தோமஸ் மில்லர் மூலம் தனது விருப்பத்தை கிறீஸ் அரசுக்கு அமெரிக்கா சுட்டிக்காட்டிவிட்டது.

# இளையோர் உதைபந்தாட்டம் கிளிநொச்சியில் நடத்த ஏற்பாடு!

(கிளிநொச்சி)

தமிழீழ தேசிய இளையோர் உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 17 ஆம், 18 ஆம திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

14 வயதுக்குட்பட்ட ஆண்கள், 17 வயதுக்குட்பட்ட ஆண்கள், 20 வயதுக்குட்பட்ட ஆண்கள்,20 வயதுக்குட்பட்ட பெண்கள் என நான்கு பிரிவுகளாக இப்போட்டி நடத்தப்படும்.

ஆட்டம், முதலில் இரு குழுக்களாக்கப்பட்டு லீக் முறையில் நடத்தப்படும். குழுக்களில் முதல் இரு இடங்களையும் பெறும் அணிகள் விலகல் முறையிலான அரையிறுதி ஆட்டத்திற்கு தெரிவுசெய்யப்படும்.

அரையிறுதி ஆட்டங்களில் இருந்து கோல்டன் கோல் முறையிலான சமநிலை உடைப்புக்குரிய மேலதிக 5 - 5 நிமிடங்கள் வழங்கப்படும்.

தொடர்ந்தும் சமநிலை காணப்படின் தண்ட உதை மூலமான சமநிலை உடைப்பு மேற்கொள்ளப்படும்.

இந்தப் போட்டிகளுக்கு 15 பேர் மட்டுமே விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர். இந்தப் போட்டிக்கு தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களின் அணிகளும், புலம்பெயர்ந்த உறவுகளின் அணிகளும் கலந்துகொள்ளும். மேலதிக விபரங்களுக்கு அ.அன்ரன் அன்பழகன் அல்லது விஜி ஆகியோருடன் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒலிம்பிக்கில் ஓடும் வாய்ப்பை மரியன் ஜோன்ஸ் இழந்தார்!



(கலிபோர்னியா)

ஒலிம்பிக் தகுதி தடகள போட்டிகளில், பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மரியன் ஜோன்ஸ் இரண்டாம் இடத்தைப் பிடித்தார்.

ஒலிம்பிக் தகுதி தடகள போட்டிகள் அமெரிக்காவில் நடந்து வருகின்றன. நேற்றுமுன் தினம் நடந்த பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 'தங்க மங்கை' மரியன் ஜோன்ஸ் கலந்துகொண்டார்.

போதை மருந்து உட்கொண்ட சர்ச்சையில் சிக்கிய இவரை, இந்த போட்டிகளில் பங்கேற்க முதலில் அமெரிக்க தடகள சங்கம் யோசித்தது. நீண்ட விசாரணைக்கு பிறகு தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இவர் பெற்றார்.

நேற்றுமுன்தினம் நடந்த 100 மீற்றர், காலிறுதி ஓட்டப் போட்டியில் ஜோன்ஸ் முதலிடத்தை தட்டிச் செல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 11.38 வினாடிகளில் எல்லைக் கோட்டை கடந்து இரண்டாம் இடத்தையே பிடித்தார்.

கிறிஸ்டே கெயின்ஸ் 11.13 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். இதன்மூலம் கெயின்ஸ் அரையிறுதி ஓட்டப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றார்.




# தேசிய இளைஞர் செஸ் சம்பியன் போட்டி யாழ்ப்பாணத்திலிருந்து செல்வோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் செஸ் சம்பியன் போட்டிக்கான மாவட்ட மட்டத் தெரிவுப் போட்டி கடந்த 3, 4 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந்தப் போட்டியின் நடுவராக யாழ்.சதுரங்கச் சம்மேளனத்தின் செயலாளர் சி.வித்தியாதரன் கடமையாற்றினார். இந்தப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் அடுத்த மாதம் கண்டியில் நடைபெறவிருக்கும் தேசிய மட்ட சதுரங்கப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம்முறை இவர்களுக்கு கரி கஸ்பரோவ் செஸ் அக்கடமியினரால் விசேட பயிற்சிகள் நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தெரிவுசெய்யப்பட்டுள்ள வீரர்களின் விபரம் வருமாறு -

12 வயதின் கீழ் ஆண்கள்

என்.லவலோஜன், மா.வருணபாலன், வி.விதூசன்.

12 வயதின் கீழ் பெண்கள்

ந.கௌஷிகா, பா.மாதங்கி, சு.பிரியங்கா.

14 வயதின் கீழ் ஆண்கள்

சோ.விஷ்ணுசந்தர், ஜெ.பிரதாபன், நா.வர்மன்.

14 வயதின் கீழ் பெண்கள்

ஜெ.டென்சிகா, இ.பவதாரணி, ந.சகித்தா.

16 வயதின் கீழ் ஆண்கள்

சி.கோபிகணேஷ், சி.வல்லவகுமரன், சி.சுலக்ஷன்.

16 வயதின் கீழ் பெண்கள்

செ.வாணிசிறி, ஜெ.குயின்சிகா, பு.சுகன்யா.

18 வயதின் கீழ் ஆண்கள்

மா.யூட்ஜெனி

18 வயதின் கீழ் பெண்கள்

சி.வித்தியாரணி.

20 வயதின் கீழ் ஆண்கள்

ஜெ.நிவேதன், நா.ஐங்கரேசன், ம.கலாருபன்.

20 வயதின் கீழ் பெண்கள்

ந.சாளின், அ.யூடா மரீனி.

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால், நடாத்தப்பட்டுவரும் 14 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில், ஸ்கந்தவரோதயா கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனா கல்லூரி அணி மோதும் போட்டி நடைபெறவுள்ளது.

# சுவிஸ் ஓபன் ரெனிஸ் இறுதிப் போட்டியில் பெடரர்

சுவிட்சர்லாந்து ஓபன் ரெனிஸ் போட்டியில் ரோஜர் பெடரர் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

சுவிட்சர்லாந்து ஓபன் ரெனிஸ் போட்டி ஸ்டாட் நகரில் நடந்துவருகிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் அரைஇறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் முதல்நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) இத்தாலியை சேர்ந்த பொடிடோவுடன் மோதினார்.

இதில் ரோஜர் பெடரர் 6-3, 3-6, 6-3, என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

2 முறை விம்பிள்டன் பட்டம் வென்றுள்ள பெடரர் இந்த சீசனில் பெற்ற 50 ஆவது வெற்றி இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றொரு அரை இறுதியில் ரஷ்ய வீரர் இகோர் அந்த்ரே, ரெய்னர் ஷெட்லருடன் (ஜேர்மனி) மோதினார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இகோர் அந்த்ரே 6-2, 3-6, 7-6, (8-6) என்ற 'செட்' கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றறார்.

# அரசாங்க பாடசாலைகளில் — ஆசிரியர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்க புதிய சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளது!

அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் ஆசிரியர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பது சம்பந்தமான சுற்றறிக்கை சகல பாடசாலை அதிபர்களுக்கும அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டுமுதல் இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரமே ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் பிரகாரம் 26 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ரீதியில் பாடசாலைகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இப்புதிய சுற்றுநிருபத்திற்கு அமைய மேற்படி ஆசிரிய எண்ணிக்கையை செயற்பாடுகளுக்கு ஏற்ப மூன்று பிரதான பகுதிகளாகப் பிரித்துக்காட்டப்பட்டுள்ளது.

- மேற்பார்வை வேலைகளில் ஈடுபடுபவர்
- பாடம் கற்பித்தல் வேலைகளில் ஈடுபடுபவர்
- ஆலோசனைச் செயற்பாடு/நூல் நிலையப் பொறுப்பு/உடற்கல்வி நடவடிக்கை/விசேட கல்வி நிகழ்ச்சிகள் என்பவற்றில் ஈடுபடுபவர் என்ற வகையிலாகும்.

மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள், வாரமொன்றுக்கு 40 நிமிடங்களைக் கொண்ட 16 பாடங்களைக் கற்பித்தல் வேலைகளில் ஈடுபடுதல் வேண்டும். பாடம் கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் வாரமொன்றுக்குப் பொதுவாக 40 நிமிடங்கள் கொண்ட 35 பாடவேளைகளும், வகுப்புக்குப் பொறுப்பாகவுள்ள ஓர் ஆசிரியர் அவ்வாறு வகுப்பிற்குப் பொறுப்பாக இருக்கும் காலங்களில் 33 பாடவேளைகள் கற்பித்தல் வேலைகளில் ஈடுபடுதல் வேண்டும்.

உயர்தரப் பரீட்சைப் பாடங்களைக் கற்பிப்பதற்காக இயன்ற சகல சந்தர்ப்பங்களிலும் பட்டதாரிகளையோ அதற்குச் சமமான தகைமை உள்ளவர்களையோ ஈடுபடுத்தவேண்டும். அவர்கள் ஒரு வாரத்திற்குக் கற்பிக்க வேண்டிய குறைந்தபட்சப் பாடவேளைகள் 30 ஆக இருக்க வேண்டும். மொத்த மாணவர் தொகை 300 இற்கு மேற்பட்டவர்களைக்கொண்ட பாடசாலைகளில் ஓர் ஆசிரியர், ஆலோசனைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக விடுவிக்கப்பட்டுள்ளார். 300 அல்லது அதற்குக் குறைவான மாணவர்களைக்கொண்ட பாடசாலைகளில் ஆலோசனைச் சேவைககாக ஆசிரியர் குழுவிலிருந்து ஒரு ஆசிரியரை 10 பாடவேளைகள் ஆலோசனை வேலைகளுக்காக ஈடுபடுததிக்கொள்ளலாம்.

உடற்கல்வி ஆசிரியர்கள் 750 மாணவர்களுக்கு மேற பட்ட பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர். ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு அதிபர் உரித்தாகின்றார்.

மாணவர் தொகை 500 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு பிரதி அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இவர்கள் உரிய ஆசிரியர் எண்ணிக்கைக்குப் புறம்பாக நியமிக்கப்படுவர்

உதவி அதிபர்களை நியமிப்பதற்குப் பின்வரும் நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அ) 1-5 ஆரம்பப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 600 இற்கு மேல் மற்றும் 6-11 இடைநிலைப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட முழு மாணவர் எண்ணிக்கை 240 இற்கு மேல் என்ற இரு நிலைகளையும் பூரணப்படுத்தும் பாடசாலை.

ஆ) 6-11 இடைநிலைப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை 960 இற்கு மேல் மற்றும் உயர்தர மாணவர் எண்ணிக்கை 140 இற்கு மேல் ஆகிய இரண்டு நிலைகளையும் பூரணப்படுத்தும் பாடசாலை ஆகியவற்றிற்கு ஒரு உதவி அதிபர் நியமிக்கப்படலாம்.

இந்த உதவி அதிபர்கள் பிரதி அதிபர்கள் வாரமொன்றிற்கு 12 பாடவேளைகள் கற்பித்தலில் ஈடுபடுதல் வேண்டும். மேற்பார்வை வேலைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், வாரத்தில் குறைந்த பட்சம் 40 நிமிடங்கள் கொண்ட 16 பாடவேளைகள் கற்பித்தலில் ஈடுபடுதல்வேண்டும். அழகியல் பாடத்தினைக் கற்றுக்கொள்ளும் மாணவர் எண்ணிக்கை 72 இற்குக் கூடுதலாக இருக்கும் பட்சத்திலேயே அதற்கென ஆசிரியர் நியமிக்கப்படுவர் என அந்தச் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (122)

## விரைவில் நகை அடகு சேவை

சாவகச்சேரி மக்கள் வங்கியின் கொடிகாமத்தில் இயங்கும் கிளை அலுவலகத்தில் நகை அடகுச்செவை வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. கச்சாய், வரணி, கொடிகாமம், மிருசுவில் போன்ற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் சாவகச்சேரி மக்கள் வங்கிக்கு வந்தே தமது நகைகளை அடகுவைத்துவருகின்றனர். எனவே கொடிகாமம் மக்கள் வங்கிக்கிளையில் நகை அடகுச்சேவை ஆரம்பிப்பதன்மூலம் அப்பகுதி விவசாயிகள் எதிர்நோக்கும் சிரமங்களை தவிர்க்கமுடியும் என தெரிவிக்கப்படுகிறது. (29)

# நசித்து அழிக்க முற்பட்ட எதிரிகளை அழிக்கும் நிலைக்கு வளர்ந்துள்ளோம்!

## கேணல் சூசை தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எம்மை நசித்து அழிக்கமுற்படும் எதிரிகளைத் துரத்தி அழிக்கும் நிலைக்கு இன்று நாம் வளர்ந்திருக்கிறோம் என கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

கடற்கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோரின் 14 ஆம் ஆண்டு நினைவுநாளை ஒட்டி கிளிநொச்சி காந்தரூபன் அறிவுச் சோலையின் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டு பேசியபோதே கேணல் சூசை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு காலப்பகுதியில் சிங்கள இராணுவம் எம்மைத் துரத்தி அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது நாம் எம்மைத் தற்காத்துக்கொள்ளும் நடவடிக்கையை மட்டுமே மேற்கொள்ள முடிந்தது.

ஆனால், இன்று எங்கள் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் கரும்புலி மாவீரர்களின் வீரமிகு தாக்குதல் திறனால் எதிரியைத் துரத்தி அழிக்கும் நிலைக்கும் இன்று நாம் வளர்ந்திருக்கிறோம்.

அந்தவகையில் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோர் வழிகாட்டியாக அமைந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# அரியாலையில் சில இடங்களில் மிதிவெடி அகற்ற மக்கள் எதிர்ப்பு

அரியாலையின் சில இடங்களில் உள்ள வீட்டுக் காணிகளில் மிதிவெடிகளை அகற்றுவதற்கு, அக்காணி உரிமையாளர்கள் அனுமதி மறுத்து வருவ்தால் அப்பகுதிகளில் மிதிவெடிகளை அகற்ற முடியாத நிலையில் “ஹலோ ட்றஸ்ட்” நிறுவனத்தினர் உள்ளனர்.

தற்போது அரியாலை உப்புக் குளம் பிள்ளையார் கோயில், அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் கோயில் ஆகியவற்றினை உள்ளடக்கிய பிரதேசங்களில் ஒரு சில வீடுகளைத் தவிர மற்றைய இடங்களில் மிதிவெடிகள் அகற்றப் பட்டுள்ளன.

இந்த நிலையில் சில வீட்டு உரிமையாளர்கள் தமது காணி நிலங்கள் பழுதடைகின்றன என்று காரணம் காட்டி-மிதிவெடிகளை அகற்றுவதற்கு எதிர்ப்புத்தெரிவித்துவருகின்றனர்.

இவர்கள் மிதிவெடிகளால் ஏற்படப்போகும் அபாயங்களைக் கருத்தில்கொள்ளாதது கவலையளிப்பதாக “ஹலோ ட்றஸ்ட்” நிறுவனத்தினர் தெரிவித்தனர். (55)

## தமிழ்விழா

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய மாணவர்கள் நடத்தும் தமிழ்விழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ்.சோமேஸ வரபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தமிழ்த் துறை உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.ஸ்ரீதயாளன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (44)

## வலிகாமம் கல்வி வலயத்தில்

# உரிய வாகன தரிப்பிடம் இன்மையால் அலுவலகத்திற்கு வருவோர் சிரமம்!

மருதனார்மடம் இராமநாதன் பாடசாலையில் இயங்கும் உடுவில் கல்விக்கோட்ட அலுவலகத்தின் நுழைவாயிலில் மோட்டார் சைக்கிள்களும், சைக்கிள்களும் நிறுத்தப்படுவதால் அலுவலகப் பணிக்குச் செல்பவர்கள் சிரமப்படவேண்டியுள்ளது.

கோட்ட அலுவலகத்திற்கு வரும் ஏனைய பாடசாலை அதிபர்கள், ஊழியர்கள், பெற்றோர்கள் தமது துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்களை மழை, வெயிலிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு மண்டப வாயில் கூரையின் கீழ் நிறுத்திவிட்டு சென்று விடுவதால் அலுவலகப் பணிக்கு வரும் அதிகாரிகளும், ஏனையோரும் உள்ளே செல்லமுன்னர், வாகனங்களை எடுத்து ஓரமாக விட வேண்டியிருப்பதாகத் தெரிவித்தனர். (101)

# நெடுந்தீவு அரச அதிபர் பணிமனைக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் நியமனம்!

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ஒருவரையே வாரத்தில இரு நாட்கள் நெடுந்தீவு பணிமனையில் பதில் கடமையாற்றும் வகையிலே யாழ்.செயலகத்தினால் அனுப்பப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் தொழிநுட்ப உத்தியோகத்தர் இன்மையால், நெடுந்தீவுப் பிரதேச மற்றும் பணிமனை வேலைகளை முன்னெடுப்பதில இருந்த இடையூறுகள் இந்த நியமனத்தால் சீர்செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (113)



*யாழ்ப்பாண பிரதேச செயலக யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியாளர் கடன்வழங்கும் ஆரம்ப நிகழ்வும், வறிய மாணவர்களுக்கு கல்வி உபகரணம் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.*

*நிகழ்வில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.கியூமன் உரையாற்றுவதையும் அருகில் யாழ்.பிரதேச செயலர், வங்கிக் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.*

# சின்னஞ்சிறு செய்திகள்

## பரஞ்சோதி கலையரங்கு திறப்புவிழா

(உடுவில்)

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பரஞ்சோதி கலையரங்கு, எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை 4 மணிகது யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தப் பாடசாலையின் பழைய மாணவர் சு.துரைராசா குடும்பத்தினரின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இக்கலையரங்கத் திறப்பு விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.காங்கேயன் கலந்துகொள்வார். (101)

## கணித, விஞ்ஞானப் போட்டிகள் ஒத்திவைப்பு

(உடுவில்)

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவிருந்த வலிகாமம் வலய கணித, விஞ்ஞானப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

அன்றையதினம் ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப்பரீட்சை நடைபெறவுள்ளதால் பிறிதொரு தினத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளதாக கணித விஞ்ஞான பாட ஆலோசகர் தெரிவித்தார். (101)

## கலாசார உபகுழு அங்குரார்ப்பணம்

வலி.வடக்குப் பிரதேச சபைக்குடபட்ட மல்லாகம், தெல்லிப்பளை, வசாவிளான், கட்டுவன், காங்கேசன் துறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கி கலாசார உபகுழு அங்குரார்ப் பணம் செய்யப்பட்டுள்ளது.

பாரம்பரிய கலைகளை அழிவிலிருந்து காக்கும் நோக்கத்தில் இக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பளை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் க.குணராசா தலைமையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் - கலாசார உபகுழுவின் தலைவராக வ.வயிரவப்பிள்ளை, உபதலைவராக சு.இராமலிங்கம், செயலாளராக தி.பிரபாகரன், உப செயலாளராக வி.நகுலேஸ்வரி, பொருளாளராக அருளானந்தசிவமும் அத்துடன் 10 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (101)

## கும்பாபிஷேக நிகழ்வு

உடுவில் கற்பொக்கணைப்பதி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன பஞ்சகுண்ட மஹா கும் பாபிஷேகம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

இதற்கான ஆரம்பக் கிரியைகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியது. பக்தர்கள் எண்ணை சாத்தும் நிகழ்வு நாளை நடைபெறும். (101)

## சனசமூக நிலைய நன்கொடை நிதியை பெற்றுக்கொள்ளலாம்.

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு வருடாந்தம் வழங்கப்படுகின்ற நன்கொடை நிதி, வங்கிகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இந்தத் தொகையினைப் பெற்றுக்கொள்ளுமாறு நகரசபை செயலாளர் தெரிவித்தார்.

இந்தத் தொகையை இன்று முதல் தத்தமது வங்கிக் கணக்குகள்மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (29)

## வருடாந்த மகோற்சவம்

ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

20 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு ரதோறசவமும், 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (46)

## ‘வெறுவெளி அரங்க’ குழுவின் நாடக நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக “வெறுவெளி” அரங்கக் குழுவின் ஏற்பாட்டில் எதிர்வரும் 17 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் காலை, மாலை என இரு அமர்வுகளாக நாடக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதில் குழந்தை ம.சண்முகலிங்கத்தால் தமிழில் பிரதியுருவாக்கம் செய்யப்பட்டு, ரதிதரனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட சிவப்பு விளக்கு நாடகமும், விமலநாதனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட ‘காலனை வென்ற காரிகை’ என்ற நாடகமும் மேடையேற்றப்படவுள்ளது. அதனுடன் வெறுவெளி அரங்கமடல் வெளியீடும் இடம்பெறும். முன்னா நடைபெறவிருந்த ஆற்றுகைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் மேடையேற்றப்படவில்லை. எனவே, விற்பனையான பிரவேசச் சீட்டுக்களை அன்றைய தினம் ஏற்றுக்கொள்ளப்படும்.

# வலி.வடக்கில் வீதிகள் திருத்த நிதி ஒதுக்கீடு!

வலி.வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள் திருத்தம்செய்யப்படவுள்ளது.

மல்லாகம் முகாந்திரம் வீதி திருத்துவதற்கு - நிதி, புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 6 இலட்சமும், மாகாண அபிவிருத்தி நிதியிலிருந்து அளவெட்டி மணற்புலம் வீதித் திருத்தத்திற்கு 3 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும், பிரமாண அடிப்படை நன்கொடை நிதியிலிருந்து துர்க்காபுரம் வீதித் திருத்தத்திற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், மல்லாகம் 7 ஆம் கட்டை வீததிருத்தத்துக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், முருகையப்புலம் கிராம மின்விநியோகத்திற்கு மாகாண விசேட நன்கொடை அபிவிருத்தி நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி - மின்விநியோக வேலைகளை ஆரம்பிக்கும் பொருட்டு மின்சார சபைக்கு வழங்கப்பட்டிருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (101)

# கலாசரம்



# மகாபௌருஷம்

சிறுகதை

செம்பியன் செல்வன்





அந்த விடிகாலை வேளையில், வேகமாக ஓடிவந்ததினாலும், மனம் கொண்டிருந்த மகிழ்ச்சியும், பரபரப்பான தவிப்பினாலும், ரதிக்கு வேர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது.

"இந்த வெள்ளணத்தில ஆர் எழும்பி தெருவேலிச் சங்கடப் படலைப் பூட்டைத்திறந்து வைக்கப் போகினம் நான் ஒரு விசரி. இதனையொண்டையும் யோசியாது ஓடி வந்திருக்கிறன். தெருவில் கத்திக்கத்தித் தொண்டைத் தண்ணிதான் வத்தப்போகுது......"

-காலையில் அவள்தம்பி அந்தச் செய்தியைக் கூறியபோது.....

-'அக்கா!....... சுரேஷ் மாமா வீட்ட வந்திருக்கிறார்.'

-'விளையாடாத உண்மையாவே......!'

-'நான் ஏனக்கா பொய் சொல்லிறன். அதிலும் இதில.....'

-'ஏனாம் வந்திருக்கிறார்.' இனி வீட்டில தான் நிப்பாரோ....? பழையபடி போயிடுவாரோ?

-'யாருக்கக்கா உதெல்லாம் தெரியும்? உதுகளையும் வெளியில சொல்லுவினமே.?

-'அது சரிடா! இந்தச் செய்தியைக் கமலி கேட்டா அவவுக்கு எப்படி இருக்கும்? அது தெரியுமே...?

-'எல்லாம் விடிஞ்சுதான்! - தம்பி பேசாமல் படுக்கப்போகிறான்.

அவளுக்கு மனம் பொறுக்கவில்லை. கமலிக்கு உடனடியாகச் செய்தியைச் சொல்லிவிட வேண்டும். அவள் முகத்தில் எழும் உணர்ச்சியைப் பார்த்து மகிழ வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. கமலியின் வீடும் அதிக தூரமில்லை.

நல்லவேளை கமலியின் தெருப்படலை பூட்டப்பட்டிருக்கவில்லை. ரதி வேகமாக உள்ளே ஓடுகின்றாள். தோழிகள் மட்டுமல்ல உறவால் மச்சாள்மார்.

-'எடி கமலி!.. எழும்பு எழும்பு இண்டைக்கு எண்டு பார் உனக்கு ஒரு கண்டறியாத நித்திரை....

-'ம்!.. வைகறைத்தூக்கம் புரண்டுபடுத்தாள். ஆனந்தமாக இருக்கிறது. ரதி அவளின் தோளைப்பிடித்து உலுப்பினாள்.

கமலி...! கமலி...! கமலி...! தோழியின் முயற்சி பலனளிக்காத போதும் அடுப்படியில் காலைத் தேநீர் கடை விரித்துக் கொண்டிருந்த மாமியின் காதில் விழுகிறது.

'ஆர் ரதியே' என்ன இண்டைக்கு காலமை ரியூசன் இல்லை என்னை ஒருவரும் எழுப்ப வேண்டாம் எண்டு இராத்திரியே சொல்லிப்போட்டுத்தான் படுத்தவள். நீ என்ன இப்ப வந்து எழுப்பிறா?

- ரதி ஒரு கணம் தடுமாறுகிறாள். திடீரென உற்சாகம் கொண்டவளாக, மாமி விசயம் என்னெண்டு தெரியுமே, ராத்திரி சுரேஷ் வீட்ட வந்து நிக்கிறாராம்.... தம்பி வந்து சொன்னவன். அதுதான்...'

அவள் முடிக்கவில்லை. மாமி அதிர்ந்து போகிறாள். கையிலிருந்த தேநீர்க்கரண்டி விழுந்து பேரொலியாக நிறைகிறது.

நான் கையெடுத்துக் கும்பிடுகிற கடவுள் என்னைக் கைவிடவில்லை. அவள் விழிகளிலிருந்து நீர் வழிகிறது.

இஞ்சருங்கோ கேட்டியளே சங்கதியை! என்றவாறு பின்வளவை நோக்கி ஓடுகிறாள். வீட்டில் பரபரப்புச் சூழ்கிறது. இந்தச் சந்தடியில கமலி கண்விழித்ததும், செய்தி கேட்டு எழுந்து விக்கித்து நின்று அழத் தொடங்கியதும் எங்கும் உணர்ச்சியலையைப் பரப்புகின்றது.

❖❖❖

'நீ என்ன மசமசத்துக் கொண்டு நிக்கிறா..' கெதியன வெளிக்கிடு!.... அங்க இப்பவே சுரேஷைப் பார்க்க அவற்ற பிரண்ட்ஸ் எல்லாம் வந்து குவிந்திருப்பினம்.....'

கமலி கிணற்றடி நோக்கி ஓடுகிறாள். அவர்கள் இருவரும் தெருவில் இறங்கியபோது நிலம் வெளுத்திருந்தது. தூரத்தே கோயில் கோபுரம் மாடப்புறாக்கள் சடசடத்துப் பறக்க தெய்வீக அருள் காட்டிக்கொண்டிருக்க, கையெடுத்துக் கும்பிடுகிறாள்.

சுரேசைப் பார்த்து எவ்வளவு வருடங்காளாகிவிட்டது... இந்த வெளி வீதியில எத்தனை திருவிழாக்கள்..... நீயும் நானுமாக அவரோடு அடித்த கொண்டாட்டங்கள்...... எல்லாம் கனவாய்ப் போய்ச்சே....இரண்டு மூன்று வருடங்கள் கோயில் திருவிழாக்கள் கூட நிண்டு போனதே... கமலியின் பேச்சை ரதி தடைசெய்தாள்.

இப்ப ஏன் இதுகளையெல்லாம் பேசி மனதைக் கஷ்டப்படுத்துறா? இப்பதான் சுரேஷைப்பார்க்கப் போறியே?

எண்டாலும் இவ்வளவு நாளாகப் பார்க்காம இருந்தவரை இப்ப பாக்கப் போறது என்னமோ மாதிரி இருக்கு..... இரண்டு மூண்டு தரம் துவக்குச் சூட்டுக்கும் ஆளானதாகக் கேள்வி. நாங்களும் போய்ப் பார்க்கவில்லை. எப்படி இருக்கிறாரோ?. முன்னம் போல பேசுவாரோ?.. கமலி பாதை முழுதும் அரற்றிக் கொண்டே வந்தாள். வழியில் அந்தப் பெரிய வேப்பமரம கண்ணில்பட்டது. அவளுக்கு அப்போதெல்லாம் பெரிய ஆசை. அந்த வேப்பங்காணியை வாங்கி, அதில் ஒரு அழகிய வீட்டைக் கட்டி வாழவேண்டும். மாமன் மாமியிட்ட சீதனபாதனம் எதுவும் கேட்கமாட்டன்... என்ர மனுஷியை வைத்துப் பாதுகாக்க நான் ஏன் பிறரிட்டக் கையேந்துவான்?.. என்பவனை வியப்பால் மலர்ந்த விழிகளால் பார்ப்பான். அவன் அப்படித்தான். உதவியென்று கேட்டுவருவோருக்கு இல்லை என்று சொல்லாத குணம்... ஒரு முறை தனது ஏ/எல் பரீட்சைக்குக் கட்ட வைத்திருந்த காசை மாமிக்கு கூப்பன் எடுக்கக் கொடுத்துவிட்டு பேசாம வீட்டுக்கு வந்து பேச்சு வாங்கியவன். இடையிடையே வேடிக்கையாகக் கூறுவது போல் கூறுவான். இந்த... எங்கட மண்ணுக்கே கொடுக்கவேண்டியது எவ்வளவோ இருக்க... இந்தக் காசுக்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தா முடியுமே?...

அவன் அவளிடம் உயிரையே வைத்திருந்தான். வருங்காலம் வர்ண வர்ணக் கனவுகளினால் பின்னப்பட்டிருந்தது. தன்னை ஒரு பொறியியல் நிபுணனாகக் கொண்டிருந்த கனவு-தகுந்த பெறுபேறுகள் பெற்றிருந்த போதும் தமிழிளைஞன் என்பதால் ஏற்பட்ட தரப்படுத்தலால், ஆளும் ஆட்சியினருக்கு அந்நியமாக்கப்பட்ட போது தனது தமிழினம் முழுவதும் தனக்குப் பின்னே அகதிகளாக... அந்நியராக... கையேந்தி நிற்பதாகப் பட்டது....

ஒரு நாள் மாலை மாமி முதன் முதலாக அவளிடம்தான் ஓடிவந்தாள். உண்மையைச் சொல்... உன்னிடம் ஏதாவது சொல்லிவிட்டுப் போனவனோ?

'மாமி....... என்ன கேக்கிறியள்' அவள் நெஞ்சம் வரண்டது.

'சுரேஷின்ர சைக்கிளை அவன்ர நண்பன் கொண்டு வந்து வீட்டில் விட்டவன். சுரேஷைக் கேட்டதுக்கு தனக்கு ஒண்டும் தெரியாது எண்டு போய்விட்டான்.... அதுதான் உன்னைக் கேட்டனான்.

அவள் ஒருகணம் நினைத்துப் பார்த்தாள்.

- நேற்றுக்கூட தெருவால் போன ஐஸ்கிறீம்காரனைக் கூப்பிட்டு எல்லாருக்கும் வாங்கிக்கொடுத்தான். வீட்டுக்கு வந்த பொழுது தம்பியின் கணக்குக் கொப்பியில் அவன் பிழை விட்டிருந்த கணக்கை எப்படிப் போட வேண்டும் என்று காட்டிக் கொடுத்தான். இரவுச்சாப்பாட்டைக் கூட தங்கள் வீட்டிலேயே எடுத்துக்கொண்டது வழமைக்கு மாறானது. ஆனால் எவரும் அதைப் பொருட்படுத்தவில்லை. கவனத்தில் கொள்ளவில்லை. இன்று எல்லாவற்றிற்கும் அர்த்தம் புரிகிறது. ஆனாலும் அடிமனத்தில் ஒரு மெல்லிய கசப்புப்படர்வதை உணராமலில்லை. 'என்னை அவன் பொருட்படுத்தவில்லை. காதலிக்கவில்லை... இல்லாவிட்டால் என்காதல் அவனைத தடுத்திருக்கும்... அல்லது என்னிடம் அனுமதியாவது பெற்றிருக்கும்... ஆனால் தனிமையில் தனது பெண்மை பெருமைப்படும்படி நடந்து கொண்டமுறைகள், பேசிய வார்த்தைகள், எதிர்காலக் கனவுகளின் விபரிப்பு.... எல்லாவற்றிலும் தான் கொண்டிருந்தமையும், இவைகளையும் புறம் தள்ளுவதற்கில்லை... அவர் மூளையே வெடித்துவிடும் போலிருந்தது.

'புதிரே உனக்குப் பெயரே சுரேஷா'......

'ஏன்... ரதி.... சுரேஷ் முந்தினமாதிரி இருக்குமா.. இல்லை ஆள்மாறி நடக்குமா..... கமலி நெஞ்சம் படபடக்க கேட்கிறாள். ரதி அவளை பரிதாபமாகப் பார்க்கிறாள்.

நீ ஒண்டுக்கும் பயப்படாத...... நான்தான் இருக்கிறனே!

தூரத்தே இளந்தாரிகளின் குரல் சிரிப்பும், கும்மாளமுமாகக் கேட்க ஆரம்பிக்க இருவரும் வேகமாக நடக்கத்தொடங்கினர்.

❖❖❖

அவர்கள் படலையைத் திறந்து கொண்டு வளவுக்குள் காலடிபதித்ததை முதலில் எவரும் கண்டுகொள்ளவில்லை. எதேச்சையாகத் திரும்பிய சுரேஷின் விழிகள் அவர் மேல் நிலைத்தது. விழிகள் சுடரிட்டது.

கமலியா.... எவ்வளவு அழகாக வளர்ந்து விட்டாள்!

அடுத்தகணம் தான் ஒரு பெரிய நெருக்கடிக்குள் ஆளாகப் போவதை உணர்ந்தும் முகம் இறுகியது. விழிகள் மௌனித்தன. அவன் பார்வை நண்பர்கள் பக்கம் திரும்பியது.

கமலி அவனைத் தூரத்தில் கண்டபோதே வியப்பிலாழ்ந்து விட்டாள். முன்பும் மெலிந்த வலிச்ச தேகம். இன்றோ அத்தேகம் ஆண்மையழகுடன் மார்பு, கை, கால், முதுகு எல்லாம் இறுகி கரணை கரணையாக மிளிர்ந்தன. முன்பு காணப்பட்ட அழகுக்கூனல் கூட மறைந்துவிட்டது. கூனல் போடச் சொன்னாலும் போடமுடியாத முதுகுத்தண்டு வாய்க்கால்.....

எல்லாம் சரிதான்..... என்னைக் கண்டவுடன் ஏன் சிரிக்கவில்லை. தெரிந்ததாகக்கூட பாவனை காட்டவில்லையே, என்னை மறந்தே போய் விட்டாரோ, கமலிக்குத் தாங்கமுடியவில்லை. நண்பர்களின் கூட்டத்தைப் பிளந்து செல்கிறாள்.

என்ன மச்சான் இப்பதான் வீட்டு நினைப்புவந்ததா? எங்களை எல்லாம் நினைப்பிருக்கா? நான் ஆரெண்டு சொல்லுங்க பார்ப்பம்......? அவளின் படபடப்பான வார்த்தைகள் சூழலை மாற்றுகிறது. சுரேஷ் சிரிக்கிறான். அதில் ஒரு பண்பட்ட ஒழுங்குமுறை தெரிகிறது.

இதென்ன கேள்வி? கமலிதான்... உங்களையெல்லாம் நினைப்பில்லாமலா பார்க்க வந்தன், எங்களுக்கு நீங்களும் வேண்டும்... இந்த மண்ணும் வேண்டும்... இந்த மண் இல்லாவிட்டால் உங்களைப் போன்றோரையெல்லாம் வைத்துப்பாதுகாக்க நாங்கள் எங்கே போவம்... நாங்கள் நாட்டைப் பிரிந்து, வீட்டைத்துறந்து, காட்டில் குடிபோவதெல்லாம் நாட்டையும் வீட்டையும் பாதுகாக்கத்தான். நாங்களில்லாக் காலத்திலும் நாடும், வீடும் உங்களைக் காக்கும்......

எல்லாரும் வியப்பிலாழ்ந்திருக்கின்றனர். அதிகம் பேசாமல் வாய் மூடி மௌனியாக நம்மிடையே வாழ்ந்திருந்த சுரேஷா இப்படிப் பேசப்பழகிவிட்டான். நாட்டு மக்களிடையே தங்கள் கருத்தைக்கொண்டு போகத்தெரிந்துவிட்டான்.

இரண்டு மூன்று முறை இராணுவத்தினரால் பயங்கரமாகத் தாக்கப்பட்டு, சிகிச்சைக்காக இந்தியா வரை சென்று வந்த இவனுக்கு இதுக்கெல்லாம் எது நேரம்? அவன் சிரித்துக் கொள்கிறான். அவனின் போர்க்களக் கதைகளை ஆர்வத்துடன் அவன் நண்பர்கள், நடுத்தர வயது உறவினர் எல்லாரும் வாய் பிளந்து கேட்டுக்கொண்டிருக்கின்றனர். போர்க்களங்களில் ஆரம்ப காலங்களில் ஆயுதம், உணவு, நீர், ஆட்கள் இல்லாமல் பட்டபாடுகளையும், உடன் போரிட்ட பல இளைஞர்கள் மண்ணுக்கு வித்தாகிப் போனதையும் வர்ணிக்கிறான். கேட்போர் மெய்யிறுகி - 'எல்லாம் எங்களுக்காகவும், எங்கள் சுதந்திரங்களுக்காகவும்தானே' என எண்ணிச் சிலிர்த்துப் போகிறார்கள்.

'அண்ணை! உங்களை ஏன் இந்தியாவுக்குக் கொண்டு போனவை....?' யாரோ ஒருவன் கேட்கிறான்.

ஒருமுறை களத்தில் 'கவர்' எடுத்துக் கொண்டு போராளிகள் போராடுகினம். வோக்கி அலறுகிறது. 'சாமான் வேண்டும்.'

"சாமான் எண்டால்....?" அப்பாவி இளைஞன் கேட்கிறான்.

"சாமான் எண்டால் ஆயுதம் வெடி மருந்துகள்....."

சாமான்களோடு வாகனம் புறப்படுகிறது. என்ர கையில் ஸ்ரியரிங் சக்கராயுதமாகச் சுழல பக்கத்தே சீலன் வழிகாட்டிக்கொண்டிருக்கிறான். ஆமி எங்களை வளைச்சுப் பிடிச்சிட, தலையாலதான் நிண்டு பார்த்துது... முடிஞ்சுதே... பாதை முகப்பிலே இருட்டோடு இருட்டாக எங்களுக்காக காத்திருக்க எதிர்ப்புறமாகச் சென்று 50 கலிபர் ஒண்டு வெடிக்கும். ஆமி பதறும். அல்லது புதிய கவர் எடுக்கப்பாயும். எங்கடை வாகனம் கிரனைட் வீச்சுகளிடையே பாய்ந்து, இலக்குகளைத்ததாக்கும். ஆமியால முடிந்ததா என்ன... அந்தக் களத்திலே பெற்றவெற்றிதான் எங்களுக்குப் பெரிய புகழைக் கொடுத்தது. ஆனால் களத்தில் வெற்றியாடித் திரும்பிய போதுதான் எங்களையும் சன்னங்கள் துளைத்திருப்பதைக் கண்டோம். சதைப்பகுதிகளில்தான் சன்னங்கள் புதையுண்டிருந்தன. இரத்தம் ஏராளமாக வெளியேறியிருந்தது. மயங்கி விழுந்தோம். நீண்ட காலம் போராளிகளுக்கு வழிகாட்டியாகவே இருந்துவந்தம்... சமீபகாலமாகத்தான் மீண்டும் போராட வெளிக்கிட்டிருக்கிறம். இன்னமும் எடுக்கப்படாத சன்னங்கள் உடலில் ஆங்காங்கே கிடக்கின்றன. அவை எங்களை ஒண்டும் செய்யா. சிலநரம்புகள் சிலசமயம் உணர்ச்சியற்றுப் போய்விடுவதான உணர்வு... இங்கு என்ன மருந்துகளை கொடுக்கிறாங்கள்.

'ஏன் அண்ணை! வடக்குப்பகுதிக்கு உணவு எண்டு எதையெல்லாம் அனுப்பி உலகுக்குக் கணக்குக் காட்டுறாங்கள் தெரியுமே.... என்றவன் வாய்விட்டுச் சிரிக்கத்தொடங்கினான். வடபகுதிக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு அனுப்பிய உணவில் முக்கிய இடம் பிடித்து... 10 மில்லியனுக்கு அனுப்பப்பட்ட பொருள் என்ன தெரியுமா?

'சானிடரி நாப்கின்ஸ்'

அரசு மக்களை ஏமாற்றிவிட்டதாகக் கொக்கரிக்க, நாங்கள் என்ன செய்தம் தெரியுமே, காயம்பட்டு இரத்தப்பெருக்கோடு வரும் போராளிகளுக்கு, இரத்தப்பெருக்கைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தினோம். கடலால் உணவுகொண்டு வருகிறோமென்று, உணவுக்கப்பலுக்கு பாதுகாப்பு வழங்குகிறோம். இல்லாவிட்டால் மக்களின் உணவைப் புலிகள் விழுங்கிவிடும் என்றும் கூறி, வரும் கப்பல்களில் ஆயுதத் தளபாடங்களைத்தானே, டோரா படகுகளின் துணையுடன் கொண்டு வந்து குவிக்கினம். இப்ப அவையின்ர பலம் கடலிலதான்.... என்று கூறி நிறுத்துகிறான். அவன் விழிகள் சிவந்து......

சரி அப்பன் முதலில எல்லாரும் சாப்பிடுவம். உன்னைக் கண்ட சந்தோசம் எல்லாருக்கும்...

எல்லாரும் சாப்பிடப் போகிறார்கள்.

அவன் தங்கியிருந்த இரண்டொரு நாளும் கோலாகலமாகக் கழிகிறது. அடிக்கடி இரவுவேளைகளில் அவன் நண்பர்கள் வந்து சந்தித்துப் போகிறார்கள். அவர்கள் வந்து போனபின் அவன் தாயினருகே சென்று படுத்துவிடுவான்.

ஒருநாள் விடிகாலைப் பொழுதில் கடற்கரைப் பக்கமாகச் சென்ற முத்தையர், தொலைதூரத்தில் பிரமாண்டமாக, புகார் மூட்டத்தின் இடையே பாரியகப்பல் ஒன்று நங்கூரமிட்டிருக்க, டோரா படகுகள் அதனைச் சூழ்ந்து வேகமாக வலம்வந்து கொண்டிருந்தன.

இன்று எங்களைச் சாமான் இறக்க எண்டு கூட்டிக்கொண்டு போய் எவ்வளவு நாள் வைச்சிருக்கப் போறான்களோ?...

அன்றிரவு சுரேஷ் மீண்டும் காணாமல் போய் விடுகிறான்.

❖❖❖

நடுநிசி. தூரத்தே கரும்பூதமென கப்பல் புகாரிடையே தென்படுகிறது. இருளோடு இருளாக வெடிமருந்துப் பொருட்களுடன் சுரேஷ் படகில் காத்திருக்கிறான். நண்பர்களின் பிரியாவிடை கண்ணீருக்குப் பதிலாக கடமையின் பலத்தை, உறுதியை நிலைபெறச் செய்கிறது.

பாதுகாப்புப் படகு அவனுக்கு முன்னால் வருகிறது.

இருள்
வேட்டை
துடிப்பு

எங்கும் துப்பாக்கிச் சூடுகள் ஒலிக்கின்றன. அந்த வெளிச்சத்தில் தன்னை இனம் காட்டாதவாறு சுரேஷின் படகு அந்தப் பாரிய கப்பலை நோக்கி நகர நகர... பகைவனும் புத்திசாலி. வெடிபொருள் படகின்ர போர்க்கப்பலைக் காப்பாற்ற முனைந்திருக்கிறான்.

போர்
தற்காப்பு
வெற்றியா?/காப்பா?

பிரளயகால ஒலி எங்கும் எழ.... கடல் இராணுவக் கப்பலை மெல்ல மெல்ல விழுங்க ஆரம்பிக்க.... சூரிய உதயத்துடன் சுரேஷின் முகமும் உதயமாவதுபோல.....

❒

# நூல் அகம்




நூலின் பெயர் : தார்மீகக் கோபங்கள்
எழுதியவர் : கோப்பாய் சிவம்
வெளியீடு : இணுவில் கலை இலக்கிய வட்டம்
விலை : 150\=

'தார்மீகக் கோபங்கள்' என்னும் சிறுகதைத் தொகுதி, இணுவில் கலை இலக்கிய வட்டத்தினூடாக வெளிவந்திருக்கிறது. இந்தத் தொகுதி ஆசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுதியாகும். 1975 ஆம் ஆண்டு தொடக்கம் 1986 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தினகரன், வீரகேசரி, மல்லிகை, ஈழநாடு, ஈழமுரசு, சிரித்திரன், சுடர் போன்றவற்றில் வெளிவந்த பதினெட்டு சிறுகதைகள் இந்தத் தொகுதியில் தொகுக்கப்பட்டுள்ளன. 1975 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பதினொரு ஆண்டுகள் வரை எழுதியிருக்கிறார். அன்று இருந்த சமூகச்சூழல், அதனுடைய தாக்கம் என்பவற்றை இந்தக் கதைகளில் காணமுடிகிறது.

கதைகள் ஒவ்வொன்றையும் நகர்த்திச் சென்றுள்ள விதம் எளிமையாகவும், குழப்பங்களற்றதாகவும் விளங்குகின்றன. அது வெளித் தோற்றத்தின் விபரிப்பாகவும், மன உணர்வின் வெளிப்பாடாகவும் இயல்பாகத் தத்ரூபமாக ஒரு நிஜக்காட்சியை நேரில் காண்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது. அத்துடன் ஒரு காட்சிக்கும், அதனால் எழுந்த மன உணர்வின் வெளிப்பாட்டுக்கும் இடையிலான தொடர்பைக் கூட மிக நுணுக்கமாகவும், மனதில் பதியும் வண்ணமாகவும் விபரித்துள்ளார். குறிப்பாக கிராமங்களில் ஒரு நிகழ்வை உள்வாங்கும் பொழுது, எப்பொழுதோ நடந்த இன்னொரு நிகழ்வின் அல்லது வாசித்த விடயம் நினைவிற்கு வருவது இயல்பு. அதனை உரிய இடங்களில் கையாண்டுள்ளார்.

இவருடைய மௌனங்கள் உடைகின்றன, அன்னை சிரித்தாள், தார்மீக கோபங்கள் தலைதூக்குகின்றன, தந்தை மகட்காற்றும் உதவி, இரசனைகள், அழகு போன்ற கதைகளில் சரி - பிழை, நன்மை - தீமைகளை சீர்தூக்கிப் பார்த்து ஒரு சுய ஆய்விற்குத் தன்னை அந்தக் கதாபாத்திரங்கள் உட்படுத்திய பின்னரே கதையின் முடிவுதெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முப்பது வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட கதைகளான அம்மாவுக்கு உண்மை புரிந்துவிட்டது, கூனல், மூன்றிற்குப் பிறகு, பிள்ளைத் தமிழ் ஆகியவை இன்றும் எமது சமூகத்துக்குப் பொருந்தக்கூடிய கதைகளாக விளங்குகின்றன. இதற்குக் காரணம் எமது சமூகத்தால் இந்தக் கதைகளில் வரும் விழிப்புணர்வு இன்னும் உள்வாங்கப்பட்டவில்லை என்றே சொல்ல வேண்டும். உள்வாங்கப்பட்டிருப்பின் அவை கதைகளாக மட்டுமே இருந்திருக்கும்.

முற்றுப்பெறாத ராகங்கள், நல்லதொரு கற்பனைக் குறுந்திரைப்படத்தைப் பார்ப்பதைப் போன்ற பிரமையை ஏற்படுத்துகின்றது. எனக்குரிய இடம், பாவத்தின் பங்காளிகள் அந்தந்தக் கதாபாத்திரத்தின் கையாலாகத் தனத்தை வெளிக்கொணருகிறது.

அரங்கேறாத ஆசைகள், குழந்தை, பிள்ளைத்தமிழ், தார்மீகக் கோபங்கள் தலைதூக்குகின்றன ஆகியவற்றில் சிறுவர்கள் சம்பந்தப்பட்ட மன உணர்வும், அவர்களுடைய அபிலாஷைகளும் காட்டப்பட்டுள்ளன.

இவரது கதைகளில் ஓரிரண்டைத் தவிர பெரும்பாலானவை சமூகத்தின் நெளிவு சுளிவுகளின் தாக்கத்தால் ஏற்பட்ட மன உணர்வின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. அத்துடன் ஒரு கருப்பொருளாக எடுத்துக் க்தையாக நகர்த்தி சமூக விழிப்புணர்வு முடிவினை தெரிவிக்கிறார். இதுவே இவரது சிறுகதைகள் பெரும்பாலானவற்றில் உள்ள சிறப்பம்சம்.

புத்தகம் என்று பார்க்கும்பொழுது உள்ளடக்கம் என்ற பகுதி பக்க எண்களுடன் சேர்க்கப்பட்டிருப்பின், மேலும் சிறப்பாக இருந்திருக்கும். முகப்பு அட்டைப்பட ஓவியத்தின் கருத்தில் கூடுதல் அக்கறை செலுத்தியிருக்கலாம்.

பொதுவாக நல்லதொரு சிறுகதைத் தொகுதியைப் படித்த திருப்தி ஏற்படுகிறது.

- சுபோதினி இராஜகோபால்.

# இலக்கிய முத்து

## பாடல் ஒன்று கருத்துக்கள் மூன்று

ஆதியாய் அநாதியாய் அவதரித்து, அன்பிற்கு விளக்கேற்றிய நம் தாய்மொழி தந்த தமிழ் பாவலர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவகையில் சிறப்புடையவர்களாக விளங்குகின்றனர்.

'கம்பனைப் போல், வள்ளுவனைப்போல் பூமிதனில் எவரும் பிறந்ததில்லை' என மகாகவி பாரதியார் பாவியற்றியதற்கும் பைந்தமிழ் பாவலர்பால் காணப்பட்ட ஆளுமையே காரணமாகும்.

சொற்சுருக்கம், பொருட்செறிவும் கொண்டு பாடல்கள் செய்த நற்றமிழ் வல்லோர் தம் பாடல் ஊடாக தமிழின் அழகினையும், அறிவின் ஆழத்தையும் அனுபவத்தின் முதிர்ச்சியையும் வெளிப்படுத்தினர்.



"ஒரு கல்லில் இரண்டு மாங்காய்" என்பது நம்மிடையே வழக்கத்தில் உள்ள ஒரு பழமொழி. ஆனால் இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஒருபாவில் மூன்று கருத்துக்களை நயம்பட உரைத்துள்ளார் காளமேகப்புலவர்.

காளமேகத்தின் கவியாற்றலைக் கண்டுகளிக்க இப்பாடல் ஒன்றே தக்கசான்றாகும். வானவில்லுக்கும், விஷ்ணுவுக்கும், வெற்றிலைக்கும் பொதுவாக ஒரு பாடலில் மூன்றையும் பற்றிப் பாடியுள்ளார் பைந்தமிழ்ப் பாவலர்.

நீரி லுளவா னிறம்பச்சை யாற்றிருவால்
பாரிற் பகைதீர்க்கும் பான்மையால் - சாருமனுப்
பல்வினையை மாற்றுதலாற் பாரீர் பெருவான
வில்விண்டு நேர்வெற் றிலை.

**வானவில்**
பெருவானவில் நீரில் உளவால் - பெரிய வானவில்லானது ஆகாயத்தில் உள்ள நீரால் தோன்றும். நிறம் பச்சையால் - பச்சை நிறத்தை உடையது திருவால் - மழைபெய்வதற்கான அடையாளமானது. பாரில் பகைதீர்க்கும் பான்மையால்-மழையினைப் பொழியச் செய்து வறுமை நோயினை நீக்குவது. சாருமனுப் பல்வினையை மாற்றுதலாற் - மனிதர்கள் செய்யும் பல முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும்.

**திருமால்**
விண்டு - திருமால். நீரிலுளவால் - பாற்கடலில் பள்ளிகொள்ளும் நீருக்கே தெய்வமாவார். நிறம் பச்சையால் - பச்சை நிறம் உடையவர். திருவால் - திருமகளை தேவியாக உடையவர். பாரீர் பகை தீர்க்கும் - உலகில் உள்ள அசுரர்களை அழித்து பகைதீர்க்கும் திறமையுடையவர் சாருமனுப் பல்வினையைப் பற்றுதலால் - மக்களைச் சார்ந்த பல துன்பங்களையும் நீக்குபவர் ஆவார்.

**வெற்றிலை**
நீர் உளவால் - நீரில் நனைத்துப் பயன் படுத்தப்படும். நிறம் பச்சையால் - பச்சை நிறத்தை உடையது. திருருவால்- மங்கலப் பொருளானது. பாரில் பகைதீர்க்கும் பான்மையால் - உலகப் பகைதீர்த்து சமாதானத்திற்கு கொடுக்கும் அடையாளமாகும் சாருமப் பல்வினை மாற்றுதலால்- பலநோய்களுக்கு மருந்தாவதால் வெற்றிலையும். வானவில்லும், திருமாலும் ஒன்றென்று கூறு.

(தனிப்பாடற்திரட்டு) - லெஸ்லி.

# காத்திருக்கும் இரைச்சல்...

எல்லாவற்றையும்
உன்னுள்ளே குமைத்து
ஏன் ~ நீ
மௌனம் சமைக்கிறாய்
எல்லா வினாவுதல்களின் போதும்
உன் புன்னகைக்குள்
எதனை ~ நீ
சொல்ல நினைக்கிறாய்
ஒலிகள் எதுவுமற்ற
உனது மொழி
இரைச்சலை ஜெயிக்குமா?
அடுத்தவனையே
பேசுபொருளாக்கி
இரைகிறது உலகம்
அதனாலும்.....
மௌனம் நிறைவுதான் ~ஆனால்
சலசலப்பே சங்கீதம்
என்றாயிற்று
ஏது சொல்ல ~ மௌனம்
ஒரு மின்சாரத்தைப் போல்
பாதைகளைப் பற்றிய
அக்கறைகளற்று பயணிக்கும்
வேகமாய் .......
மொட்டுக்களின் மௌனம்
உடைகையில் தானழகு
நீ ~ பேசு
கண்ணிவெடிகளின்
நிலத்தில் நடப்பதுபோல்
சற்றே அசந்தாலும்
~காத்துக் கிடக்கிறது
இரைச்சல் ~ உனக்காக
வார்த்தைகளை "ஓலமிட"

- த.அகிலன்

# சூட்சுமம்

காற்று கழுவும்~
முகத்தில் ~
நேற்று வீழ்ந்தது
தூசு ~

மூச்சுக் குழாயின்
முகப்பில் ~
மீனின் முள்ளு
உடைந்தது

பேசும் இதழ்களின்~
உடைவில்~
பூசும் கழிகள்
புகுந்தன~

மார்பின் துடிப்பில்~
கனிகள்~
விழுந்து விழுந்து
துடித்தன

தூசிலும் முள்ளிலும்~
உடைவிலும்
துடித்திடும் கனிகள்~
அழுதன~ அழுதன...

- பூ.புலேந்திரராஜா

# சமூகத்திற்குப் பயனுள்ளதாக எழுத்துக்கள் இருத்தல் வேண்டும்

எழுத்தின் வடிவங்கள் பலதரப்பட்டதாக இருக்கின்றன. ஆனால் அந்த எழுத்தின் வடிவங்களின் கருத்தானது சமூகத்திற்கு ஏற்றதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கவேண்டும். நாங்கள் எழுதுகின்ற கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் சமூகத்தைப் பிரதிபலிக்கக்கூடியதாகவும், சமூகத்தினை தெளிவாக்கக் கூடியதாகவும், புரிந்து கொள்ளக்கூடியதாகவும் இலகுவாகவும் இருக்கவேண்டும்.



எழுத்திலும் அறுசுவை உண்டு. அது ஒவ்வொருவரும் படிக்கின்றபோது தனித்தனி மாற்றங்களை அவர்களுள்ளே ஏற்படுத்தும். அதாவது தவறான பாதையில் செல்பவனுக்கு வழிகாட்டியாகவும், தான் தவறான பாதையில் செல்வதை அறிந்தும் எமது சமூகத்துக்கு ஒத்துப்போகாதவனுக்கு பிடிக்காமலும் போகின்றது.

ஆயுதம்போல்தான் பேனா என்று சொல்லுவார்கள். அவ்வளவுக்கு எழுதுகின்றவனுக்கும், படிக்கின்றவனுக்கும் நன்கு தெரியும். மிரட்டல்களால் ஒருவன் எழுதுவதை நிறுத்திவிடமுடியாது. தான் தப்பித்துக் கொள்வதற்காக சமூகத்திற்கு எழுத வேண்டியவற்றை எழுதாமல், சம்பந்தமில்லாமல் ஏதோஒன்றைப் பற்றி எழுதிக்கொண்டு - தன்னை எழுத்தாளன் என்று அடையாளப்படுத்திக் கொண்டு, தனது வாழ்வினை நகர்த்துபவர்கள் ஒரு பெரிய தவறினை விடுகின்றார்கள்.

எமது மண்ணின் மீதும், மக்களின் மீதும் அன்பு வைத்திருப்பவன் ஒரு எழுத்தாளனாக இருக்க வேண்டும். பக்கச்சார்புகொண்டு எழுதுகிறவர்கள் தமது எழுத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள். இன்று எங்கள் மண் விடுதலைக்குப் பக்கத்தில் நிற்கிறது. ஆயிரக்கணக்கில் போராளிகள் தமது உயிர்களை இந்த மண்ணுக்கு வித்திட்டிருக்கிறார்கள். இதனைப் புரிந்து கொள்ளவேண்டும்.

கொழும்பில் இருந்து கொண்டும், வேறு இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் இருந்துகொண்டும் அவன் கொடுத்த எச்சில் பணத்திற்காக எழுதுகிறவர்கள் ஒன்றை மட்டும் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறானவர்கள் வரலாற்றில் இடமில்லாமல் போய்விடுவார்கள். அவர்கள் எழுதும் எழுத்துக்களும் பயனற்றதாகிவிடும்.

கயிற்றினை தொண்டையில் இறுக்கிக்கட்டி, தண்ணீரை வாயில் ஊற்றுகின்றது அரசு. மண்ணில் பொறிகிடங்கினை கிண்டிவிட்டு நடக்கவருகின்றது அரசு. இதற்கு ஏமாளிகளாக ஏமாந்துபோய் இன்று வரையும் இருக்கின்ற எழுத்தாளர்களை நினைக்கின்ற போது கவலை அளிக்கின்றது.

ஊரைவிட்டு ஓடி வெளிநாட்டில் இருந்துகொண்டு - எமது விடுதலையை கொச்சைப்படுத்தி எழுதிய எழுத்தாளர்கள் எந்த முகத்தோடு இங்கே வருகிறார்கள் தெரியவில்லை.

ஒவ்வொரு எழுத்தாளனுக்கும் தமிழ் சமூகத்தை அடையாளப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. அப்பொழுதுதான் விடுதலையின் வரலாறு தெரியும். தியாகத்தின் அருமை புரியும். சுதந்திரத்தின் விலை தெரியும். நாங்களும் ஏதாவது இந்த மண்ணுக்குச் செய்யவேண்டும் என்ற கடைமை உணர்ச்சி மேலோங்கிக் காணப்படும். இவை அனைத்தையும் எழுத்தின் மூலம் பிரதிபலிப்பாகப் பெற்றுக்கொள்ளலாம்.

எழுத்தாளனிடம் கோபம், திமிர், நான் என்ற அகங்காரம் போன்றன எல்லாம் இருக்கத்தான் செய்கின்றன. எப்படி இருந்தாலும், எமது இலக்கு-நாம் செல்லும் பாதை ஒன்றாக இருக்கவேண்டும். - வா

# பூக்கள் அழுகின்றன

சாலையில் பிரேத ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. பிரேதம் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வழியெல்லாம் பூக்களைத் தூவிக் கொண்டே சென்றார்கள். விசாரித்ததில் தெரிந்தது. அது ஒரு விதவையின் பிணம். எனக்கு அப்போதே ஒரு ஹைகூ தோன்றியது.

"அவளுக்குத்தான் இப்போது
எத்தனை பூக்கள்
விதவையின் பிணம்"

இந்தச் சமூகம் தான் எவ்வளவு முரண்பாடாக நடந்து கொள்கிறது. உயிரோடிருந்தபோது அவளுக்குப் பூக்களை மறுத்த சமூகம் அவள் செத்தபிறகு ஏன் பூக்களால் அலங்கரிக்கிறது? 'ட்ரூமன் கப்போட்' எழுதிய அந்த ஏக்க வாக்கியம் நினைவுக்கு வந்தது.

"நான் உயிரோடிருக்கும் போது
பூக்களைத் தரமாட்டீர்களா"?

பூக்களை பற்றிய வாக்கியம். ஆனால் முள்ளைப்போலத் தைக்கும் வாக்கியம். விதவையின் பிணம் மட்டுமா இப்படிக் கேட்கும்? சமூகத்தால், சட்டங்களால், சம்பிரதாயங்களால் சித்திரவதைப்பட்டுச் செத்த ஒவ்வொரு மனிதனும் இப்படிக் கேட்பான். பூ என்பது மகிழ்ச்சியின் குறியீடு - அன்பின் குறியீடு - வாழ்க்கையின் குறியீடு. உயிரோடு இருக்கும் போது ஒருவனை நிம்மதியாக வாழவிடாமல், அவன் பாதை எல்லாம் முட்களைப் பரப்பி வைத்துவிட்டு, அவள் செத்த பிறகு அவளைப் பூக்களால் அலங்கரிப்பது போன்ற முட்டாள்தனம் வேறெதுவும் இருக்கமுடியுமா? வரதட்சனைக் கொடுமையால் மணமாலை சூட முடியாதவள் ஏங்கியே சாகிறாள். அவள் பிணத்திற்கு மாலை சூடப்படுகின்றது. அவளை மரணத்திற்கு மணம் செய்து வைக்கிறார்களா?

வீட்டுக்கு வந்த மருமகள் விளக்கை எரித்தாள். வீட்டுக்காரர்களுக்கு வெளிச்சம் கிடைக்கவில்லை. அடுப்பை எரித்தாள் வீட்டுக்காரர்களுக்கு பசி தணியவில்லை. அவளே எரிந்தாள். வீட்டுக்காரர்களுக்கு வெளிச்சமும் கிடைத்தது. பசியும் தீர்ந்தது. அவளுக்கு நெருப்பு வைத்தவர்களே அவள் பிணத்தின் மேல் பூக்கள் தூவுகின்றார்கள்.

வறுமையால் வாடிச்சாகிறான் ஒருவன். உயிரோடிருந்த போது



அவன் வாழ உதவாத சமூகம் செத்த பிறகு அவனுக்கு மலர்களைத் தூவுகின்றது. உரிமை கேட்டுப் போராடியவர்களைக் குண்டுகள் துளைத்தன. போர் வெறியர்களால் சாம்பல் மேடாகிப்போன ஊர்கள் கேட்கின்றன. ஹிரோஷிமா கேட்கிறது. நாகசாஹி கேட்கிறது, வியட்நாம் கேட்கிறது, ஜாலியன்வாலாபாக் கேட்கிறது. போபால் கேட்கிறது. தெலுங்கானா கேட்கிறது. ஈழம் கேட்கிறது. பம்பாய் கேட்கிறது. பூக்களே கேட்கின்றன.

"இவர்கள் உயிரோடிருக்கும் போது
பூக்களைத் தரமாட்டீர்களா"?

போர் வெறிபிடித்த அரசியற்பீடங்களைப் பார்த்துக் கேட்கின்றார்கள், மதங்களைக் கேட்கின்றார்கள், சட்டங்களைக் கேட்கின்றார்கள், சாதிகளைக் கேட்கின்றார்கள், கட்சிகளைக் கேட்கின்றார்கள், சமூகத்தைக் கேட்கின்றார்கள்.

"நாங்கள் உயிரோடிருக்கும் போது
பூக்களைத் தரமாட்டீர்களா

- அப்துல் ரகுமான்.

சர்வதேச அரசியல்

கே.ரி.கணேசலிங்கம்

# உலகத்தை திருடும் அமெரிக்கா!

உலகளாவிய வல்லரசுகளது நடவடிக்கைகள் மிக நீண்டகால ஆதிக்கத்தை இலக்குவைத்து மேற்கொள்ளப்படுவதுண்டு. உரோமப்பேரரசு, பிரித்தானியப் பேரரசு என்பன பல நூற்றாண்டுகளாக நிலைத்திருந்த ஆதிக்க அரசுகளாகச் செயற்பட்டன. நவீன தகவல் தொழில்நுட்ப யுகத்தில் அதிகாரச் சமநிலையை கொண்டிருந்த இருதுருவ அரசியல் அரசுகளில் சோவியத்யூனியன் அரை நூற்றாண்டுகளை தாண்டவில்லை. ஆனால், அமெரிக்க ஆதிக்கம் அரை நூற்றாண்டைத் தாண்டி செயற்பட்டாலும் பல நூற்றாண்டுகள் நிலைத்திருக்கும் அரசியலை மேற் கொள்ளுமா என்றவாதம் பலவீனமானதாக மாறுகின்றது. மோசடியான அரசியல், பொருளாதாரச் சுரண்டல்கள், இராணுவரீதியான சர்வா திகாரப் போக்குகள் அமெரிக்கா மீதான எதிர்ப்புணர்வுகளை மேலும் அதிகரித்ததுடன், வல்லரசுக்கான புதிய வரையறைகளும் மேலெழுந்துள்ளன. அமெரிக்காவின் திருட்டு அரசியற் பொருளாதாரம் எவ்வாறு உலகத்தில் மேற்கொள்ளப்படுகின்றதென விரிவாக நோக்குவோம்.

அமெரிக்க மூதாதையர் சுரண்டலுடனும், வெறியாட்டத்துடனுமேயே தமது அமெரிக்க வாழ்வை ஆரம்பித்தனர். கொலம்பஸின் வெறியாட்டம் இன்னுமே ஓயவில்லை. செவ்விந்தியரை அழித்தொழித்துவிட்டு அமெரிக்கக் கண்டத்தைக் கைப்பற்றிய அமெரிக்கர்கள் உலகத்தை ஆக்கிரமிக்க நவீன வடிவத்தில் செயற்படுகின்றனர். ஆனால், அவர்களது திருட்டு, கொலம்பஸ் காலத்திற்கு ஒப்பானதாகவே உள்ளது.

ஈராக்கிலிருந்து யுரேனியத்தை அமெரிக்கர்கள் திருடிய விதமும் கொலம்பஸ் செவ்விந்தியர்களை அழித்துவிட்டு மதிப்பிடமுடியாத அமெரிக்கக் கண்டத்துச் சொத்துக்களை சூறையாடியதற்கு ஒப்பானதாகும். ஐக்கிய நாடுகள் சபையினதோ அல்லது இடைக்கால பொம்மை அரசை பொறுப்பேற்கவிருந்த அதிகாரிகளிடமோ எந்தவித அனுமதியுமின்றி இரண்டுக்கு மேற்பட்ட தொன் யுரேனியத்தை அமெரிக்கர்கள் திருடியுள்ளனர். இது ஒரு வெளிப்படையான திருட்டல்ல. மோசடியான திருட்டு. உலகத்தை ஏமாற்றிவிட்டு அல்லது உலக ஊடகங்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் மறைத்துக் கொண்டு அமெரிக்கா யுரேனியத் திருட்டை நிகழ்த்தியுள்ளது. அமெரிக்கா ஈராக்கை தாக்கியதற்கு கூறிய காரணங்கள் பொய்யானவை என்று அறிக்கைகள் வெளிவரும் போது இது நிகழ்ந்துள்ளது. இதுவே அமெரிக்கர் ஈராக்கை ஆக்கிரமிக்க அடிப்படைக் காரணமாக இருந்தது. அதாவது, ஈராக்கின் எண்ணெய் வளத்தைச் சுரண்டுவதையும் அதனால் ஈராக்கின் நீண்டகால அரசியல் வலுவை இல்லாது செய்துவிடலாம் என்பதையும் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டுள்ளது.

ஈராக்கின் யுரேனியத்தை திருடியது போன்று எத்தனை மெற்றிக் தொன் எண்ணெயை அமெரிக்கா திருடியிருக்கும் என்பதே பிரதான கேள்வியாகும். ஈராக்கை அரசியல் ரீதியில், இராணுவரீதியில் தோற்கடிக்கும் தனியான நோக்கத்துடன் அமெரிக்கா போரைத் தொடக்கவில்லை. 1999 ஆம் ஆண்டுக்குப் பின்பு அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் சரிவையும், சரிக்கட்டும் நோக்குடனேயே அமெரிக்கா இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. ஆனால் அமெரிக்கா எதிர்பார்த்தது போல் பொருளாதார சுரண்டல் பெரியளவில சாத்தியப்படாத போதே திருட்டை மேற் கொள்ள முடிவெடுத்துள்ளது.

குடியேற்ற ஆட்சிக்காலத்தில் பிரித்தானியர் கீழைத்தேசத்தில் திருடிச் சென்றது போலவே, அமெரிக்காவும் ஈராக்கைச் சூறையாடியுள்ளது. இத்தகைய சூறையாடலினூடாக அமெரிக்க மக்களின் பொருளாதாரப் பலத்தை அமெரிக்காவால் ஓரளவேனும் பாதுகாக்க முடிந்திருக்கும். இந்தத் திருட்டின்படி அம்பலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதைவிட எத்தனையோ திருட்டுக்கள் வெளிவராமலே மூழ்கிப்போகின்றன.

அமெரிக்கா- உலகத்தை திருடுகின்ற பாணிகள் பல ரகமானவை. பொருளாதாரத் திருட்டுக்களாகவே முதல் ஆயத்தங்களை ஒரு அரசு மீது பிரயோகிப்பது அமெரிக்க வழக்கமாகும். அத்தகைய திருட்டை நாகரிகமாக அமெரிக்க நலனென்று அழைத்துக் கொள்வார்கள். அவ்வாறு நாகரிகமான அமெரிக்க நலன் சாத்தியப்படாது விட்டால் அடுத்த கட்டம் அரசியல் ரீதியான மிரட்டல், அச்சுறுத்தல் இராஜதந்திரம் என்பன நிகழும். இதற்கு அவ்வரசு மசியவில்லையாயின் இராணுவ ரீதியான படையெடுப்புக்கு அடுத்த திட்டமிடலை அமெரிக்கா ஆரம்பிக்கும். இதில் உலக நாடுகளை பலியிட முடியுமாயின் அவற்றையும் இணைததுக் கொண்டு செயல்படும். இறுதியில் இலாபத்தை முழுமையாக அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டு ஏனைய அரசுகளை 'அம்போ' எனக்கைவிடுவது அமெரிக்காவின் வழக்கமாகும்.

எனவே, மூன்றாவதும் இறுதியான அணுகுமுறைக்கு அரசுகள் போகாது செயற்படுமாயின் அவ்வரசுகளுடன் அமெரிக்காவினது அணுகுமுறை தனித்துவமானதாக அமையும். நல்லுறவும் பேணப்படும். அமெரிக்காவின் பொருளாதார திருட்டுக்கான மேலும்பல அணுகுமுறைகளைப் பரிசீலிப்போம்.

நன்கொடைத் திருட்டு என்ற ஒருவகை பொருளாதாரச் சுரண்டல் வறிய நாடுகள் மீது மேற்கு நாடுகளால் மேற்கொள்ளப்படுகிறது. இது நன்கொடையாளி நாடுகள் எல்லாவற்றினதும் அணுகுமுறையாகும். ஏறக்குறைய வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் அவற்றின் அரசசார்பற்ற அமைப்புக்களுக்கும் சாகும் அம்சமாகும். நன்கொடை, உதவி, எனக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வளர்ச்சியடைந்த நாடுகள் பின்தங்கிய நாடுகளுக்கு வழங்கி வருகின்றன. ஆனால் அவ் உதவியையோ, நன்கொடையையோ பெற்று எந்த வறிய நாடுகளும் அபிவிருத்தி அடைந்ததாகத் தெரியவில்லை. இதில் காணப்படும் பிரதான குறைபாடு நன்கொடை, உதவி என்பதொடு கூடவே திருட்டும், சுரண்டலும் நிகழ்ந்து வருகிறது.

வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழில்நுட்ப வளர்ச்சி இத்தகைய திருட்டுக்கு பின்னூட்டலாக அமைந்துள்ளது. நன்கொடை மற்றும் உதவியுடன் தொழில்நுட்ப அறிவையும் வளர்ச்சியுடைந்த நாடுகள் வறிய நாடுகள் மீது திணிக்கின்றன. பின்தங்கிய நாடுகளிடம் தொழில்நுட்பம் வளரவில்லை என்பதே அவர்களின் பிரதான வாதமாகும். நன்கொடையாக வழங்கும் தொகையில் 2/3 பங்கை மீளவும் தொழில்நுட்பம், ஆலோசனை, உள்ளீடுகள் என்ற அடிப்படையில் வளர்ந்த நாடுகளுக்கு திரும்புகின்றது. இதனால் வறியநாடுகளின் திட்டமிடலும் பேணப்படாது நன்கொடையும் செவ்வனே பிரயோகிக்கப்படாத பொருத்தப்பாடற்ற சூழல் காணப்படுகின்றது. இதுவே அபிவிருத்தி சாத்தியப்படாமைக்கு பிரதான காரணமாகும்.



வறிய நாடுகள் எப்போதும் வறிய நாடுகளாகவே காணப்படுவன என்பதற்கு கடந்த ஐம்பது ஆண்டுகளுமே தெளிவான வரலாறாகும். வேண்டுமாயின் ஆட்சியாளர்களும் அரசாங்க அமைப்பின் பணிக்குழு உயரதிகாரிகளும் பொருளாதார பேணுகையையும், பாதுகாப்பையும் கொண்டவர்களாகக் காணப்படுவார்கள். அவர்களையும் அவர்கள் சார்ந்த உயர்வர்க்கத்தையும் பாதுகாப்பதே அமெரிக்கா போன்ற மேற்குலகின் பிரதான நோக்கமாகும். இதற்கு ஒரு சிறந்த உதாரணத்தை எடுத்துக்காட்டுவது பொருத்தமானதாகும். இதற்காக **'Globalization And Its Discontents Revisited'** என்ற நூலின் ஒரு பகுதியை இங்கு குறிப்பிட முடியும்.

இராணுவ அடக்குமுறைகளுக்குள் அகப்பட்டிருந்த ஆஜென்ரீனா என்ற நாடு 1976 ஆம் ஆண்டு பொருளாதார ரீதியில் திறந்த கொள்கையை உள்வாங்கியது. இராணுவ ஆட்சிமுறையை தகர்த்துவிட்டு ஜனநாயகம் ஆஜென்ரீனாவில் தளைத்தோங்க வழி ஏற்பட்டது. ஆட்சி முறையில் ஏற்பட்ட மாறுதலானது உலகநாடுகளின் உதவியையும். ஒத்துழைப்புக்களையும் பெற்று பொருளாதாரத்தை உயர்த்த முடியும் என்ற நிலையை ஏற்படுத்தியது. இதனால் அதிக நம்பிக்கையோடு பொருளாதார மீளமைப்பு, திறந்து விடுதல் சாத்தியமானது.

வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தன. தனியார் மயப்படுத்தலுக்கான வாய்ப்புக்கள் அதிகப்படுத்தப்பட்டது. இதனால் பொருளாதாரத்தின் ஆரம்பகாலம் மிகச் சிறப்பான வளர்ச்சியைக் காட்டுகின்ற போக்குகள் தென்பட்டன. உழைப்பாளர் வேலையின்மை குறைந்தது, சுயமான தொழில்வாய்ப்புப் பெருகியது, உழைப்பாளர்களுக்கான நிறுவனங்கள் பெருகியது, பொருளாதார வளர்ச்சி நிகழ்ந்தது, உற்பத்தி, சந்தை வாய்ப்பு என்பவற்றிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன.

இந்தப் போக்கு 1990 ஆம் ஆண்டுக்குப் பின்பு படிப்படியாக சரிவடையத் தொடங்கியது. வேலையின்மை திடீரென உயர்வடையத் தொடங்கியது. 1960 ஆம் ஆண்டுகளில் இராணுவ ஆட்சி, அடக்குமுறை இராணுவ சதிப்புரட்சி நிலவிய காலப்பகுதியை விட மோசமான வேலையின்மை அதிகரித்தது. உழைப்பாளிகள் வீதிக்கு வந்தனர். அரசுக்கு எதிராக கிளர்ச்சிகளையும், போராட்டங்களையும் ஆரம்பித்தனர். முதலீடு செய்த வெளிநாட்டு நிறுவனங்கள் தமக்குரிய பாதுகாப்பின்மையைக் காட்டி வெளியேறத் தொடங்கினர். மீண்டும் வறுமை ஆஜென்ரீனாவுக்குரியாதாக மாறியது. வேலையின்மையைப் போன்று வறுமை மிக மோசமான நிலையை அடைந்தது. 1974 இல் 2.1 சதவீதமாக இருந்தது. 2002 ஏப்ரலில் 50 சதவீதமாக அதிகரித்தது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை போன்று செல்வந்தர்களின் எண்ணிக்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

மக்கள் தொகையில் 10 பேருக்கு 2 சதவீதமாக இருந்த செல்வந்தர்களின் பங்கை, 2002 இல் 10 பேருக்கு 57 சதவீதமான செல்வந்தரை உருவாக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. ஏறக்குறைய இரண்டுமே ஒரு சமாந்தரமான வீதத்தில் உயர்ந்திருக்கிறது. வேலையின்மை 1994 இல் 15.4 சதவீதமானது 2001 இல் 28.4 சதவீதமாக விளங்குகிறது. இது தொழில்நுட்ப சாதனங்களை உள்வாங்கியதால் வேலையின்மை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. அவ்வாறே 51.0 சதவீதமானவர் முழுமையாக வேலையில்லாத தொழிலாளர்களாக விளங்குகின்றனர்.

இவ்வாறு இருபதாம் நூற்றாண்டில் மிகச் சிறப்பான பொருளாதார உறவை உலகத்தோடு ஏற்படுத்திய ஆஜென்ரீனா தமது நாட்டின் பொருளாதார தேவைகளை உழைப்பாளரின் அவசியத்தைக் கணக்கிடாது உலகத்தோடு உறவினைப் பேண முயன்றதே தோல்விக்கான காரணமாகும். இன்றுகூட முதலாளித்துவத்தின் பரிணாமத்தில் ஆஜென்ரீனா வளர்ந்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ உலகத்தின் சுரண்டல் முறைமை நேரடி முதலீடுகளினூடாகவும், நன்கொடை உதவியினஊடாகவுமே நிகழ்ந்தது. குறிப்பிடத்தக்க சாராரை முதலாளிகளாக்கும் நடைமுறையை ஏற்படுத்தி அவர்கள் சார்ந்த புதிய பொருளாதாரம் ஒன்றை உருவாக்கியதுடன், அப்பொருளாதார குழுவினருடன் நெருக்கமான உறவை அமெரிக்கா பின்பற்றிவரு கிறது.

எனவே, ஆஜன்ரீனா அனுபவத்தின் ஒரு பக்கத்தை மட்டுடே பகிரமுடிந்தது என்பதுடன் அதேபாணியில் வறிய நாடுகளை அமெரிக்கா திருடிவருகிறது. திருட்டை நியாயப்படுத்தும் அணுகுமுறைகளையும், நீதி அமைப்புக்கள், மனித உரிமைகள், சர்வதேச சட்டங்கள் என்பவற்றை பக்கபலமாகக் கொண்டு செயற்பட்டுவருகிறது.

நேரடி முதலீடு பெருகுவது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான உபாயமாகவே அரசு கருதுகின்றது. அத்தகைய நோக்கு தவறானதல்ல. ஆனால், அதனை முதலீடு செய்யும் அரசுகள் பின்பற்றும் தந்திரமான உபாயங்கள் தான் ஆபத்தானவை. வறிய நாடுகளில் முதலீட்டைச் செய்வது அதிக இலாபத்தை அடைவதற்கு.

குறைந்த வரி கீழ்மட்ட உழைப்பாளிகளின் அதிக உற்பத்தி என்பவற்றுடன் தமது நாட்டின் பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், மொழிப் பிரயோகங்கள் என்பன பரவலடைகின்றன என்ற நீண்ட நோக்குடனான இலாபத்தையும் அந்நாடுகள் அடைகின்றன. இதில் நேரடி முதலீட்டை உள்வாங்கும் நாடுகள் அடையும் வருமானத்தைக் காட்டிலும், அடையும் நட்டம் அல்லது இழப்பீடுதான் அதிகமாகும். சில நாடுகளில் நேரடி முதலீடாக முதலிடப்படும் டொலருடன் முதலீட்டை உள்வாங்கும் நாட்டின் மூலப்பொருளையே பயன்படுத்தி உற்பத்தியைச் செய்துவிட்டு உற்பத்திச் செலவுடனும், தமது இலாபத்துடனும், அப்பொருளை முதலீட்டை உள்வாங்கிய நாட்டுக்கே அதிக விலைக்கு விற்பனை செய்யும் அணுகுமுறையை வளர்ந்த நாடுகள் பின்பற்றுகின்றன.

உலகம் முழுவதும் சுரண்டல் பொருளாதாரம் மிகத் தீவிரமாக இடம்பெறுகின்றது. ஆனால், ரோம பேரரசு போன்றோ, பிரித்தானிய பேரரசு போன்றோ தகவல் யுகம் இன்றைய காலத்தில் பலவீனமானதல்ல.

அதனால், அன்றைய திருட்டைச் செய்த வல்லரசுகளது தகவல்கள் வெளிவர காலம்தாழ்த்தியது போலல்ல இன்றைய காலம். வெகுவேகமாக திருட்டு அம்பலமாகிவிடும். வேண்டுமாயின் நலன், சுரண்டல் என பொருளாதாரவாதிகளும், அரசியல்வாதிகளும் விளக்கம் கொடுக்கலாம். ஆனால், அமெரிக்காவின் சுரண்டலும், நல னும் ஒருவகைத் திருட்டு என்பதே யதார்த்தமானது.

ஈராக்கின் யுரேனியத்தையும், எண்ணெய் வளத்தையும் அமெரிக்கா திருடுவதற்கும் 1990 இல் குவைத்தை ஆக்கிரமித்து அதன் எண்ணெயை சுரண்டிய ஈராக்கிற்கு அடிப்படையில் எந்த வேறுபாடும் கிடையாது. ஈராக் குவைத்தை தனது மாகாணமெனக் கூறியதற்கு வரலாற்று நியாயப்பாடு இருந்ததுபோல, அமெரிக்கா ஈராக்கிடம் இரசாயன அணு ஆயுதங்கள் உண்டு எனக் கூறியதில் நியாயப்பாடு பொய்யானதாகிவிட்டது. இப்போலிக்காரணத்தால் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் பதவி விலகவேண்டியதற்கான நெருக்கடி வலுத்துவருகிறது. அடுத்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலும் நெருங்குகிறது.

எனவே, இன்றைய அமெரிக்கா சார்ந்த முதலாளித்துவத்தின் பொருளாதாரமே திருட்டுப் பொருளாதாரமாகும். உலகத்தை ஏப்பம்விடும் அமெரிக்கா உட்பட மேற்கு உலகம், உலகமயமாதல் என்ற சுலோகத்தை பயன்படுத்திக் கொண்டு திருட்டை நியாயப்படுத்த முனைகினறது. வறிய நாடுகளின் பொருளாதார விடுதலை என்பது மேற்குலகிடமிருந்து விடுபடுவதிலேயே தங்கியுள்ளது.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்
- திருக்குறள்

# நமது நோக்கு

## அரசியல்வாதிகளுக்கு விடப்பட்ட எச்சரிக்கை

ஆறு மாகாண சபைகளுக்கு நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் - இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக கருதப்படாவிட்டாலும்,

இந்தத் தேர்தலை மக்கள் எதிர்கொண்ட விதம் முக்கியத்துவமானதாகக் கருதப்படுகிறது.

1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வைக்கப்பட்ட மாகாணசபைகள் 1988 இல் உருவாக்கப்பட்டன

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலவிய பிரச்சினைகளுக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபைகள், இந்த மாகாணங்களில் சுமார் 15 வருடங்கள் செயலற்றுப் போய்விட்டன.

ஆனால், எஞ்சிய ஏழு மாகாண சபைகள் மட்டும் இயங்கிவருகின்றன. இவற்றில் ஆறு மாகாணசபைகளுக்கே நேற்றுமுன்தினம் தேர்தல் நடத்தப்பட்டது.

இந்தத் தேர்தல் ஒரு 'மினி தேர்தல' என விமர்சனம் செய்தவர்களும் இருந்தனர். இன்னொரு புறத்தே இதை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் மீதான கருத்துக்கணிப்பாகவும் சிலர் கணித்தனர்.

சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர், நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொண்ட வாக்காளர்கள், குறுகிய காலத்துக்குள் இன்னொரு தேர்தலை எதிர்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்தத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் மிக மோசமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. நாடு முழுவதும் - கடந்த பொதுத்தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளைவிட பாதியளவானோரே இந்தத் தேர்தலில் வாக்குப்பதிவு செய்துள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 76 சதவீதமான மக்கள் வாக்களித்திருந்தபோதும் மாகாண சபைத் தேர்தலில் வாக்களித்தோர் 40 வீதத்துக்கும் குறைவாகும்.

ஏன் திடீரென இந்த வீழ்ச்சி ஏற்பட்டது? ஆளுங்கட்சி தமக்கு ஆறு மாகாணசபைகளின் அதிகாரமும் கிடைத்துவிட்டதென பெருமை பேசினாலும் - இந்தத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளும், ஆளுங்கட்சி பெற்ற வாக்குகளும் மோசமாகக் குறைந்துவிட்டதை அவதானிக்கலாம்.

வாக்காளர்கள், அரசியல் மீதும் ஜனநாயக விழுமியங்கள் மீதும் கொண்டிருக்கும் அவநம்பிக்கையே வாக்களிப்பு இப்படி மோசமாகக் குறைவடையக் காரணமாகும்.

ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்பட்டதாகக் கூறிக்கொள்ளும் அரசாங்கம், வாக்காளர்களான - நாட்டு மக்களுக்கு எதைச் செய்திருக்கிறது?

மக்களுக்கென்று எதைச் செய்தது என்பதைவிட, இந்த அரசினால் நாடாளுமன்றக் கூட்டங்களையாவது ஒழுங்காக - குழப்பமின்றி நடத்த முடிந்ததா என்றால் எதுவுமேயில்லை.

இப்படியிருக்க, சமாதான முயற்சிகளில்கூட இந்த அரசினாலோ, அல்லது முன்னைய அரசினாலோ எந்த முன்னேற்றகரமான கட்டத்தையும் எட்டமுடியவில்லை.

ஏதோ, யுத்தமும் இல்லை, அமைதியும் இல்லை என்ற இரண்டும் கெட்ட சூழல் ஒன்றுக்குள் மாட்டிக் கொண்டவர்களாகவே நாட்டு மக்கள் உள்ளனர்.

நிரந்தரத்தீர்வு, நிரந்தர அமைதி என்பவற்றை எந்தவொரு அரசியல்வாதியும் தமக்கு வழங்கப்போவதில்லை என்று தென் பகுதி மக்கள் திட்டவட்டமாகத் தீர்மானித்துவிட்டதாகவே - இந்தத் தேர்தலை அவர்கள் எதிர்கொண்ட விதம் எண்ணத் தோன்றுகின்றது.

கடந்த பொதுத் தேர்தலின்போதும் சரி, அதற்கு முன்னரும் சரி எந்தவொரு கட்சியும் சமாதானம் தொடர்பாக வாக்காளருக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேயில்லை.

இப்படி ஏமாற்றுத் தலைவர்கள் நிறைந்த அரசியல் களத்தில் இருந்து தாம் ஒதுங்கிக்கொள்வது நல்லதென்று வாக்காளர்கள் கருதத் தலைப்பட்டுவிட்டனரா என்ற சந்தேகம் எழுகின்றது.

தெற்காசியாவில் உயர்கல்வி அறிவைக்கொண்ட இலங்கையில் இப்படி மோசமான அளவு வாக்களிப்பு இடம்பெற்றிருப்பது - அரசியல் மற்றும் அரசியல் வழிமுறைகள் மீதும், அரசியல்வாதிகள் மீதும் கொண்டிருக்கும் மக்களின் அவநம்பிக்கையை பிரதிபலிப்பதாகவே எடுத்துக்கொள்ளலாம்.

இது அரசியல்வாதிகளுக்கு விடப்பட்ட எச்சரிக்கை என்பதில் சந்தேகமில்லை.

## நாடும் நடப்பும்




# தேர்தல் முறையை மாற்றியமைக்கும் தெரிவுக் குழுவை நியமிக்க முயற்சி!

(கொழும்பு)

இந்த வருடம் முடிவடைவதற்குள் நாடாளுமன்றத் தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்காக மீண்டும் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முயற்சி செய்து வருவதாக நாடாளுமன்ற செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இது தொடர்பாக எதிர்வரும் வாரங்களில் மற்றைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசின் கீழ் 2003 செப்ரெம்பர் முதலாம் திகதி முதற்தடவையாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 19 பேரோடு தினேஷ் குணவர்த்தன தெரிவுக் குழுவை நியமித்தது.

நடைமுறையிலுள்ள தேர்தல் முறையை திருத்தி அமைப்பதன் பொருட்டு, தேவையான கலந்துரையாடல்களை வழங்குவதற்கு தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழு தேர்தல் முறையை மாற்றியமைப்பது பற்றி தேர்தல் ஆணையாளர் உட்பட மூத்த அதிகாரிகளின் சாட்சியங்களையும் பெற்றுக்கொண்டது.

சிறிய கட்சிகள், பலவித சமுதாய அமைப்புக்களும் குழுவின் முன்னால் சாட்சியளித்தன. அதில் இந்த வருடம் பெப்ரவரி மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டபோது, இந்தக் குழு செல்லுபடியற்றதாய் போய்விட்டது.

தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழுவில் இருந்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த பொதுத் தேர்தலின் போது, தோல்வி அடைந்ததனால் அதற்காகப் புதிய உறுப்பினர்கள் ஐந்து பேரை நியமித்து தெரிவுக் குழுவை மீண்டும் அமைப்பது அரசின் நோக்கமாகும்.

இதன் பின்னர் கடந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நட வடிக்கையை நிறுத்தியிருந்த இடத்தில் இருந்து சாட்சியங்கள், விசாரணைகளை மேற்கொண்டு வருட முடிவுக்குள் பொருத்தமான திருத்தங்களை சமர்ப்பிப்பது அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(தே)

# ஐக்கிய தேசிய கட்சிக்கு மக்கள் நல்ல பாடம் கற்பித்துள்ளனராம்

## அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே கூறுகிறார்

(கொழும்பு)

நாடாளுமன்றத்திற்குள் பெரும்பான்மை பற்றிப் பேசிக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சிக்கு இந்த நாட்டு மக்கள் மறக்கமுடியாத பாடத்தைக் கற்பித்துள்ளதாக மாகாண சபைத்தேர்தல் முடிவுகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே கூறினார்.

மாகாண சபைத் தேர்தலில் இதுவரையில் கிடைத்த அனைத்து ஆசனங்களையும் வைத்துக்கொண்டு பார்த்தால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும் வெற்றி பெற்றுள்ளது. இதிலிருந்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வழங்கிய ஆதரவு இந்த மாகாண சன்பத் தேர்தல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப்பெற் ஐக்கிய தேசிய கட்சி முயற்சி செய்தாலும், இந்த நாட்டு மக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுடன் தான் இருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்தத் தேர்தல் முடிவுகளின்படி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

அரச ஊழியர்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்து நூற்றுக்கு 75 வீதமான வாக்குகளை எமக்கு அளித்திருக்கிறார்கள். மற்றைய தேர்தல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சில சிறு சம்பவங்களைத் தவிர, ஜனநாயக ரீதியில் நடைபெற்ற நீதியான தேர்தலாகவே இது அமைந்துள்ளது.

எனினும், இந்தத் தேர்தலில் வாக்குச்சீட்டுக்களைப் பாவித்தோரின் தொகை மிகவும் குறைவாகவே இருந்தது. 50 வீதத்திற்கும் குறைவானோரே வாக்களிப்பில் ஈடுபட்டனர் என, நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தலின் முடிவுகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

# கம்பன் கழக விழா 15ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு கம்பன் கழகம் நடாத்தும் கம்பன் கழக விழா இந்த மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை மாலை நிகழ்வாக வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

15ஆம் திகதி கம்பன் கோட்டத்தில் இருந்து கம்பன் திரு வுருவ ஊர்வலம் ஆரம்பமாகி இராமகிருஷ்ண மண்டபத்தைச் சென்றடைந்து, முதல்நாள் நிகழ்வாக திருநாள் மங்கல நிகழ்வு இடம்பெறும். இதனைத் தொடர்ந்து விவாத அரங்கு, பட்டிமன்றம் இடம்பெறும். 17ஆம் திகதி காலை இலக்கிய ஆணைக்குழுவின் சிறப்பு நிகழ்வும், கவிமாமணி அப்துல்காதர் தலைமையில் கவி அரங்கம் நடைபெறவுள்ளது. இறுதி நாள் நிகழ்வாக கருத்தரங்கும், சான்றோர் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறும்.

இம்முறை கம்பகாவலர் விருது தமிழ்நாடு புதுச்சேரியை சேர்ந்த கம்பன் கழகத் தலைவர் ந.கோவிந்தசாமி முதலியாருக்கு வழங்கப்படவுள்ளது. இந்த விழாவில் கௌரவம் பெறும் சான்றோர்களாக முத்த தமிழ் அறிஞர் கா.போ. இரத்தினம், யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசியர் எம்.சிவசூரியா, கொழும்பு கதிரேசன் கோவில் அறங்காவலர் சுப்பிரமணிய செட்டியார், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ், எழுத்தாளர் கலாநிதி குணராசா, பேராதனை பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் ம.மூக்கையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு கம்பன் கழகம் தெரிவித்தது.

# தமிழகத்திலிருந்து 12 குடும்பங்கள் நேற்று நெடுந்தீவை வந்தடைந்தன

(நெடுந்தீவு)

இந்தியாவில் தங்கியிருந்த 12 குடும்பங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் நேற்று நெடுந்தீவுக்கு வந்தன.

நெடுந்தீவைச் சேர்ந்த 12 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் நெடுந்தீவுப் பகுதியில் மீளக்குடியமர விண்ணப்பித்தனர்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் 12 குடும்பங்களையும் இந்தியர்விலிருந்து விமானம் மூலமாக கொழும்புக்கு கொண்டு வந்து, அவர்களுக்கு போக்குவரத்து உதவித் தொகையாக 25 ஆயிரம் ரூபாவையும் வழங்கி அவர்களை உறவினர்களிடம் கையளித்தனர்.

இவர்கள் தமக்கு வழங்கப்பட்ட பணத்தைக் கொண்டு ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு வந்து அங்கிருந்து நேற்று நெடுந்தீவை வந்தடைந்தனர்.

சர்வதேச புலனாய்வு அரசியல்

-வன்கூவரிலிருந்து ரிஷி

# கே.ஜி.பி: மீண்டும் அமெரிக்காவுக்கு தலைவலி



(நேற்றைய தொடர்ச்சி)

ரஷ்யா ரூபிள் மதிப்பைச் செயற்கையாக அதிகரித்து அந்நியச செலவாணி பணமாற்று விகிதத்தை நிர்ணயித்துக் கொண்டது.

நியமமான மதிப்பில் ஒரு கட்டு ரூபிள் நோட்டுக்களைக் கொடுத்துத் தான் நூறு டொலர் நோட்டை வாங்க முடியும் என்பதாக இருக்க, ரஷ்யா தனது நாணயத்துக்கு தானே நிர்ணயித்துக் கொண்ட மதிப்பு அதைவிடப் பல மடங்கு அதிகம்.

இதனால், ரஷ்ய ரூபிளை ரஷ்யாவுக்கு வெளியே புழங்காமல் வெற்றீகரமாகப் பார்த்துக் கொண்டது ரஷ்ய அரசு. ரஷ்யா உடைநத பின்னர் அதுவரை ரூபிளைப்பயன்படுத்தி வந்த பல பிரதேசங்கள் தனித்தனி நாணயங்களை அறிமுகப்படுத்தி புழக்கத்தில் விட்டிருந்தன. அந்தவேளை பொதுவான ஒரு நாணயம் தேவைப் பட்டது.

அந்தவேளை, சி.ஐ.ஏ.யின் நாணயம் உள்ளே புகுந்து அந்தக் காரியத்தை செய்தது. கூடவே அந்த நாணயத்தை வைத்து சி.ஐ.ஏ.க்கு உளவு சொல்ல ஆட்களையும் வாங்கிக் கொண்டது. அப்படியே சி.ஐ.ஏ. ரஷ்யா முழுவதிலும் அருமையான நெற்வேக்கைச் செய்து கொண்டது.

ரஷ்யாவிலிருந்து உடைந்து போய விட வேண்டிய நாடுகளெல்லாம் பிரிந்து போய்விட, இறுதியில் இருப்பவை எல்லாவற்றையும் ஒன்றிணைத்து -ரஷ்யா தனது அலுவலைச் செய்யலாம் என்று பார்த்தால், ரஷ்யாவுக்குள் அதுவரை இல்லாத அளவிற்கு வெளிநாட்டுக்காசும், வெளிநாட்டுப் பொருட்களும். ரஷ்ய மக்களைப் பார்த்தால ரூபிளில் சம்பாதிப்பதைவிட டொலர்களின் சம்பாதிப்பையே விரும்பினார்கள். டொலர் கொடுத்து எதனையும், செய்யமுடியும் என்றிருந்தது ரஷ்யர்களின் மனோநிலை. இந்த லட்சணத்தில் அமெரிக்காவுக்கெதிராக வல்லரசுப் போட்டியில் எப்படி இறங்குவது என்பதில் அடக்கி வாசிக்கத் தொடங்கியது, ரஷ்யா- மாதக்கணக்கில், வருடக்கணக்கில்,

இதற்கிடையே அமெரிக்காவும் சி.ஐ.ஏயும் மத்திய கிழக்கிலும், ஆப்கானிலும் தமது கவனத்தைச் செலுத்த ஆயிரக்கணக்கான சி.ஐ.ஏ ஏஜெண்ட்களை, ரஷ்யாவினுள் வைததிருப்பது தேவையற்ற ஒன்றெனக் கருதி அவர்களை கொஞ்சம் கொஞ்சமாக ரஷ்யாவிலிருந்து வெளியே எடுத்தது. ரஷ்யாவுக்குள் இருந்த சி.ஐ.ஏ. ஏஜெண்ட்களுக்கு தகவல் கிடைத்தால்தானே வெளியே அனுப்ப முடியும். ரஷ்யாவே இராணுவ ரீதியிலான நகர்வுகள் எதனையும் ரஷ்யாவுக்குள் மேற்கொள்வது கல்லுப் பிள்ளையார் போலிருக்க, சி.ஐ.ஏ. ரஷ்யாவினுள் இருந்த தனது ஏஜெண்ட்களில் 80 வீதமானவர்களை வெளியே எடுத்து மத்திய கிழக்குக்கு அனுப்பிவிட்டது.



ரஷ்யா வருடக்கணக்கில் எதிர்பார்த்ததும் அதுவேதான். அதன் பின்னர் சிறிது சிறிதாக கே.ஜி.பியை பலப்படுத்தியது ரஷ்யா. அதனைச் செய்ய ரஷ்யா விசித்திரமான செயல்களில் ஈடுபட்டது. கொஞ்சம் சாட்டையடிதான். ஆனாலும், அது வேலை செய்தது - அது என்னவெனறால், ரஷ்ய அரசின் உத்தியோகபூர்வமான உளவு அமைப்பான கே.ஜி.பியின் அதிகாரிகளுக்கு ரஷ்ய அரசு சம்பளம் கொடுத்தது. ரஷ்யாவின் உத்தியோக பூர்வ நாணயமான ரூபிளில் அல்ல - அமெரிக்க டொலர்களில்.

இவ்வளவையும், செய்ததற்குப் பலன் கிடைத்ததா என்றால் - முற்று முழுதாக கிடைத்தது என்று சொல்லி விடமுடியாது. வேண்டுமானால் பாதிக்குப்பாதி பலன் கிடைத்தது என்று சொல்லிவிடலாம். அதுவும் இந்த மாதிரி சொல்லப்பட்ட பாதிக்குப்பாதி என்னவென்றால், கடந்தமாதம் ரஷ்யா செய்து கொண்ட இராணுவ நகர்வுகள் பற்றி வெளியே தகவல் பரவாமல் தடுத்திருக்கிறது. அத்துடன் அவர்கள் உபயோகித்ததாக சொல்லப்படும் ஆயுத உபகரணங்கள் பற்றியும் வெளியே தெரியவரவில்லை. இவை பற்றி உறுதியான தகவல்கள் இல்லை. வெறும் ஊகங்கள்தான் உலாவுகின்றன.



இன்றைய நிலையில் ரஷ்யா மீது ஓர் பயத்தை ஏற்படுத்தும் வகையிலான இராணுவ நகர்வு நடந்து முடிந்திருக்கிறது.

இது பாதிக்குப்பாதி பிளஸ் பொயின்ட் என்றால், மறுபாதி மைனஸ பொயின்ட். இந்த இராணுவ நகர்வில் எவர் தப்பியிருக்கிறார்கள், இராணுவ அதிகாரிகள் அதுவும் ரஷ்ய அதிபரின் கண்முன்னாலே.

ரஷ்யா என்னதான் செய்தது. கடந்த மாதம், ரஷ்யாவின் **Command and Staff Training** இல் நடந்தது என்ன? ரஷ்யா இராணுவத்தின் வழமையான பயிற்சி என்றே குறிப்பிடுகிறது. ஆனால், அதில் உபயோகித்ததாகக் கூறப்படும் ஆயுதங்களின் விபரங்களைப் பார்த்தால் அதனைப் பயிற்சி என்று கூறுவது மகா கஷ்டம். இந்தப் பயிற்சிக்கான ஏற்பாடுகள் ஓர்சந்தேகப் பெயரிலேயே செய்துள்ளனர்.

பயிற்சி நடைபெற்ற போதுதான் அந்த சந்தேகப்பெயர் வெளியிடப்பட்டது. அதன் பெயர் **Command and Staff Training** ரஷ்ய இராணுவத்தின் முக்கிய இலக்கங்கள், எல்லாமாக ரஷ்ய இராணுவத்தின் ஆறு படைப்பிரிவுகளும் கூட்டிணைந்து செய்யப்பட்ட இந்த **Command and Staff Training,** ரஷ்ய வரலாற்றில் 20 வருடங்களின் பின்னர் திட்டமிடப்பட்ட மிகப்பெரிய ஒப்பிரேசனாகும். இதற்கு முன்னர் இப்படியான ஒரு இராணுவ நடவடிக்கையைச் செய்த போது ரஷ்யா அமெரிக்காவுக்கு சமனானதாக இருந்தது.

ரஷ்ய பரப்பில் வெளியிடப்பட்ட தகவலின்படி ரஷ்ய இராணுவத்தில் உள்ள 40 சதவீதப் படைப் பிரிவினரும் துணைப்படையிலுள்ள மூன்றிலொன்று பகுதியினரும் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். ஆனால், சர்வதேச அரசியல் வட்டாரத்தில் இந்தக் கூற்றை யாரும நம்பத்தயாராக இல்லை.

சதவீதக் கணக்கை கைவிடுங்கள் ஒப்பிரேசன் செக்கியுரிட்றி 2004 ஒரு ஒத்திகைப் பயிற்சி என நம்பத் தயாராக இல்லை. பிந்திவந்த தகவல்களின்படி ஒப்பிரேசனின் முதலாவது கட்டம் இருவாரங்கள் நடைபெற்ற போது, மொத்தம் 250 இராணுவ கொமோண்டோக்கள் பங்கு பற்றியிருக்கிறார்கள். அவர்களுடன் 2000 சிரேஷ்ட அத்தியட்சகர் பங்கு கொண்டிருக்கிறார்கள்.

இந்த முதலாவது கட்டத்திற்காக துணைப்படையிலிருந்து அழைககப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரம் பேர். இவ்வளவு பேரை வைத்துச் செய்யப்பட்ட ஒப்ரேசனின் பரிமாணம் வெளியே தெரியாதபடி பார்த்துக் கொள்ள ரஷ்ய இராணுவ தலைமை ஓர் புத்தி சாதுரியமான பணியைச் செய்தது. (தொடரும்)

தெற்குத் திசையினிலே...

-கொழும்பிலிருந்து இந்திரஜித்

# சமாதானத்தின் அடுத்த கட்டம்...? அரசாங்கத்தின் கைகளில்!

கொழும்பில் சுமார் மூன்று வருடங்களுக்குப் பின்னர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதுவரை காலமும் யுத்தத்தைப் பற்றி எதிர்வுகூறிக்கொண்டிருந்த மக்கள் மத்தியில் யுத்தசூழ் நிலை அருகில் வந்துவிட்ட உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

என்றாலும், போர்நிறுத்த உடன்பாட்டில் இது பாரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்ற தகவல் மக்களை சற்று திருப்தி கொள்ள வைத்துள்ளது. ஜனாதிபதியின் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல போர் ஏற்பட்டுவிடும் என்று எதிர்வு கூறப்பட்டே வந்துள்ளது.

ஆனால், அதனைத் தடுக்கும் வழிகளை அரசாங்கம் உரியமுறையில் இதுவரை முன்னெடுக்கவில்லை. சர்வதேச சமூகம் இன்று இலங்கை விடயத்தில் தலையிட்டுள்ளமையால், தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் எதனையும் மேற்கொள்ள மாட்டார்கள் என்பதே அரசாங்கத்தின் நம்பிக்கையாக இருக்கிறது.

முன்னரைப்போல போரை முதலில் தமிழீழ விடுதலைப் புலிகளே ஆரம்பித்தனர் என்ற பிரசாரத்தை மேற்கொள்ள அரசாங்கம் தருணம் பார்த்துக்கொண்டிருக்கிறது.

அவ்வாறான ஒரு தருணம் மூலம- இனப்பிரச்சினைக்கான தீர்வை மேலும் காலதாமதம் செய்து, தமது அரசியலைக்கொண்டு செல்வதே அரசாங்கத்தின் உள்ளார்ந்த எண்ணமாகும்.

ஆனால், முன்னர் இல்லாதிருந்த சர்வதேச ஆதரவு தற்சமயம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இருக்கிறது. முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளை மாத்திரம் குறைகூறிக் கொண்டிருந்த சர்வதேச சமூகம், இன்று அரசாங்கத்தையே சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு வலியுறுத்திவருகின்றது.

இந்த நிலையில் இலங்கை அரசாங்கத்தின் இனப பிரச்சினைத் தீர்வு விடயத்தை தமது விருப்பப்படி மேற்கொண்டு செல்வதற்கு அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளது. அரசாங்கத்தின் இந்த இயலாமை நிலைக்கு அது கடந்த காலங்களில் நடந்து கொண்ட விதமே காரணமாகும்.

எப்போதும் இலங்கை அரசாங்கம் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மனந்திறந்த நிலை பேச்சுவார்த்தைகளை நடத்தவில்லை. என்பது அனைவரும் அறிநத விடயம்.

எனவே, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போதெல்லாம் பின்புலத்தில் சமாதானத்துக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வந்தது. இது சமாதானப் பேச்சுக்களை இடையில் பாதித்த அதேநேரம், விடுதலைப் புலிகள் அமைப்பு எவரையும் நம்பியிராத அமைப்பாக வளர வழிவகுத்தது.

அந்த வளர்ச்சி இன்று அந்த அமைப்பை - சர்வதேசம் இலங்கை அரசாங்கத்துடன் சமமான அமைப்பாக ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு உயர்த்தி விட்டிருப்பது தமிழர்களுக்கு சர்வதேசத்தில் கிடைத்த அங்கீகார நிலையாகும்.

எனவேதான் இன்று அரசாங்கம தமது அரசியல் இலாப நகர்வுகளை முன்னெடுக்க முடியாத நிலைக்குச் சென்றுள்ளது.

இந்த நிலையில் மட்டக்களப்பில் தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இருவருக்கு இலிப்பச் சேனையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மரண தண்டனை வழங்கியிருப்பது தென்னிலங்கைகது விடுக்கப்பட்டிருக்கும் இரண்டாவது எச்சரிக்கை எனக் கருதப்படுகிறது. அத்துடன், இலங்கை இராணுவத்தினருக்கும் எச்சரிக்கையாகவே எடுத்துக்கொள்ளப்படவேண்டிய ஒன்றாக கருதப்படுகிறது. விடுதலை போராட்ட வரலாற்றில் இவ்வாறான துரோக சம்பவங்கள் அவ்வப்போது இடம் பெற்று வந்த போதும், இவை பல போராளி இயக்கங்களால் முறியடிக்கப்பட முடியாமல்போன அதேநேரம், தமிழீழ விடுதலைப் புலிகளால் மாத்திரமே அவ்வாறான சதி முயற்சிகளை முறியடிக்க முடிந்தது. எனவேதான், அந்த அமைப்பு இன்றும் பலமான அமைப்பாக திகழ முடிந்திருக்கிறது.

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவமானது. இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் சுற்றுலாத் துறையும் அடங்குகிறது.

சமாதான சூழ்நிலை தற்சமயம் தளம்பல் அடைந்துள்ள நிலையில் இலங்கைக்கு முதலீட்டு வாய்ப்புகளும் இன்று விலகி செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை தவிர்க்க வேண்டுமாயின் இலங்கை அரசாங்கம் பாரிய முன்னெடுப்புக்களை மே. கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனை மேற்கொண்டால் மாத்திரமே ஜே.வி.பி. தமது ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளமுடியும் என்ற நிலை காணப்படுகிறது.

இதனை கருத்திற்கொண்டு தற்போதைய அரசாங்கம் தமது நகர்வுகளை ஆரம்பித்துள்ளது. அதன் ஒரு கட்டமே கொழும்பு குண்டு வெடிப்பு சமாதானத்துக்கு பாதிப்பான விடயமாகாது என அரசாங்கம் கூறுகிறது.

மேலும், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்கும் வண்ணம் அரசாங்கம் நடவடிக்கைகளை ஆரமபிக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்கிறது. இதன் அடுத்தடுத்த நகர்வுகளை பார்க்கமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகளின் எச்சரிக்கைகள் தென்னிலங்கையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்பதையே அந்த நகர்வுகள் சுட்டிக்காட்டவுள்ளன.

இதேவேளை, தற்சமயம் நாட்டில் இடம்பெற்றுள்ள 6 மாகாண சபை தேர்தல்களிலும் கொழும்பு குண்டு வெடிப்பின் தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, அரசாங்கத்துக்கு இந்த தேர்தலில் குறிப்பிட்டளவு சரிவு ஏற்படலாம் என்ற கருதகோளும் உலவுகிறது.

மறுபுறத்தில், அரசாங்கத்தின் மீது தமிழ் மக்கள் மாத்திரமே அதிருப்தியை கொண்டிருக்கிறார்கள். சிங்களவர்களை பொறுத்தவரையில் அவர்கள் இன்னமும் முழுமையாக ஜே.வி.பி. அரசாங்கத்தின் மீது நம்பிக்கையை இழக்கவில்லை.ஏனெனில், சகல அரசாங்கமும் தாம் பொதுத் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றாத போதும். அதில் ஆரம்ப கட்டங்களை தொட்டுப் பார்த்திருக்கிறது. அதில் குறிப்பிடக் கூடிய ஒன்றுதான பட்டதாரிகளின் வேலை வாய்ப்புக்கான விண்ணபபக் கோரலாகும்.




இது பட்டதாரிக்களை பொறுத்தமட்டில் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதா? அல்லது ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவளிப்பதா? என்ற இரண்டும் கெட்ட நிலையை உருவாக்கியுள்ளது.

## போர்நிறுத்தமும், சமாதானமும்

நாட்டில் இன்று நிலவும் சூழ்நிலையானது, போர் நிறுத்த உடன்பாட்டை உடைத்து விடுமோ? என்ற பயம் உருவாகியுள்ள போதும், இல்லை அவ்வளவு பாரதூரமான நிலை ஏற்படாது என சமாதானத்தில் அதீத நம்பிக்கை கொண்டோர் தம்மை தேற்றிக்கொள்கின்றனர். அதிலும் உண்மை இருக்கிறது.

ஏனெனில், யுத்த நிறுத்தம் கடைப்பிடிக் கப்படுகின்ற நாடுகளிலேயே இலங்கையில் மாத்திரம் தான், ஆகக் குறைந்த யுத்தநிறுத்த மீறல்கள் இடம்பெறுவதாக சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

எனவே, தற்போது இடம்பெறுவது யுத்த நிறுத்த மீறலா? என ஊகிக்க முடியாத நிலையில் சில சம்பவங்கள் இலங்கையில் அண்மை காலத்தில் இடம்பெற்றுள்ளன.

அரசாங்கம் இது தொடர்பில் உடனடியாக அறிக்கையையும் வெளியிட்டுள்ளது. அதில் இந்த சம்பவங்கள் தமது சமாதான முன்னகர்வை பாதிக்காது என கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் இன்று சமாதான பேச்சுவார்த்தையைக் காட்டிலும் போர் நிறுத்த உடன்பாட்டை உரியமுறையில் பேணவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. இது சமாதான முயற்சிகளில் ஒரு சரிவு நிலைதான் என்பதில் சந்தேகமில்லை.

ஆயினும், யுத்தநிறுத்தத்தின் காவலனாக செயற்படும் நோர்வே தரப்பு. இதனை சமாளிக்குமா? என் பதிலேதான் அடுத்த கட்டத்தின் நகர்வுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

எனவே, நோர்வே தரப்பை மீண்டும் ஒரு முறை இலங்கைக்கு வருமாறு, அழைப்பதற்கு இலங்கை அரசாங்கம் தயாராகிறது.

இறுதியாக ஒன்றை மட்டும் உறுதியாக கூறவேண்டும். இம்முறை போர் நிறுத்தத்தை மாத்திரம் உறுதியாக கடைபிடிக்கவேண்டும் என்ற நிலைப்பாடு மட்டுமல்லாமல், காலம் தாழ்த்தாமல் நோர்வே தரப்பினிடம் ஜனாதிபதி, இடைக்கால தன்னாட்சி தொடர்பாகவும் நல்ல முடிவை கூற வேண்டிய கட்டாயத்தக்கு உள்ளாகியுள்ளார். அப்போது மாத்திரமே சமாதானத்தின் அடுத்த கட்டம் - நம்பிக்கையானதாக இருக்கும். இல்லையேல் நாடு மீண்டும் அதள பாதாளத்துக்கு தள்ளப்படும்.

### இந்திய மத்திய பிரதேசத்திலுள்ள

# விமானப்படை ஆயுதக்கிடங்கில் வெடிவிபத்து; ஆயுதங்கள், வெடிமருந்துகள் எரிந்து நாசம்!

இந்திய மத்திய பிரதேச மாநிலம் பிடுல் மாவட்டம் அருகே உள்ள விமானப் படை ஆயுதக் கிடங்கில் எதிர்பாராதவிதமாக நடந்த வெடிவிபத்தில் - ஏராளமான வெடி குண்டுகள் மற்றும் ஆயுதங்கள் நாசமடைந்தன. இந்தச் சம்பவத்தில் விமானப்படையைச் சேர்ந்த இரண்டு பேர் காயமடைந்தனர்.

மத்திய பிரதேச மாநிலம் பிடுல் மாவட்டத்தில் இருந்து 30 கிலோமீற்றர் தொலைவிலுள்ள அம்லா நகரில், விமானப் படைக்குச் சொந்தமான ஆயுதக்கிடங்குகள் உள்ளன. இவற்றில் ஒரு கிடங்கில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் எதிர்பாராத வகையில் தொடர் வெடிகுண்டுச் சம்பவம் நடந்தது. இதில், கிடங்கு முழுவதும் தீப்பற்றி எரிந்தது. உடனடியாக விமானப்படை தீயணைப்புப் வீரர்கள் விரைந்து, ஒருமணி நேரத்திற்கும் அதிகமாகப் போராடித் தீயை அணைத்தனர்.

இந்தச் சம்பவத்தில் கிடங்கில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகள், ஆயுதங்கள் பெரிய அளவில் நாசமடைந்தன. இதில், சில வெடிகுண்டுகள் ரஷ்யத் தயாரிப்பு வெடிகுண்டுகள் என்று கூறப்படுகிறது.

விமானப்படை ஆயுதக்கிடங்குக்கு அருகே, குடியிருப்பு வீடுகள் அதிகளவில் உள்ளன. அங்கிருந்தவர்கள் இந்தச் சம்பவத்தை நேரடியாகப் பார்த்தனர். தொடர்ந்து அதிக சத்தத்துடன் வெடிகுண்டுகள் வெடித்தமை அந்தப்பகுதி மக்களை அச்சத்தில் ஆழ்த்தியது. என்ன நடக்கிறது என்று தெரியாமல் அச்சத்தில் உறைந்தனர். பலர் வீட்டைவிட்டு வெளியேறினர்.

இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த அந்தப் பகுதி மக்கள் சிலர் கூறுகையில் - தொடந்து வெடிகுண்டுகள் வெடித்தபோது பயங்கரத் தீப்பிழம்புடன், புகை காணப்பட்டது என்றனர்.

இதுகுறித்து விமானப்படைச் செய்தித் தொடர்பாளர் கூறுகையில் - இந்தச்சம்பவம் குறித்து விசாரிக்கப்படும், எந்தளவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்பது பற்றியும் விசாரணை நடத்தப்படும், அருகிலிருந்த குடியிருப்பு வாசிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றார்.

மாவட்டக் ஆளுனர் சுதா சவுத்திரி கூறுகையில் - தொடர் வெடிகுண்டுச் சம்பவத்தால் கிடங்கில் பெரியளவில் இருந்த ஆயுதங்கள், வெடிகுண்டுகள் அழிந்தன. முழுவதும் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னரே சேதத்தின் மதிப்பு என்ன என்பது தெரிய வரும். இதில் எந்தவித உயிர்ச்சேதமும் இல்லை. தீயணைப்பிற்குப் பின்னர் இடிபாடுகளைச் சரிசெய்யும்போது விமானப் படையைச் சேர்ந்த ஜனக்லால் சுதேகர் மற்றும் ராஜாராம் ஆகியோர் காயமடைந்தனர். பிடுல் மற்றும் அருகில் இருக்கும் ஊர்களில் இருந்து தீயணைப்புப்படைகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தன என்றார்.

எவ்வாறு வெடிச் சம்பவம் நடந்தது என்பதைக் கண்டறியவும், புலனாய்வு நடத்தவும் நாக்பூரில் இருந்து விமானப்படை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். முழுமையான விசாரணைக்குப் பின்னரே வெடிச் சம்பவத்திற்கான சரியான காரணம் தெரியவரும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## இஸ்ரேலில் குண்டுத் தாக்குதல் ஒருவர் பலி: 21 பேர் காயம்

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 21 பேர் படுகாயமடைந்தனர். இவ்வாறு காயமடைந்தவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

இந்தத் தாக்குதல் டெல் அவிவில் உள்ள பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில்



இடம்பெற்றதாக இஸ்ரேலியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலைத் தாமே நடத்தியதாக பலஸ்தீனத்தில் உள்ள அல் - அக்சா மாட்டியர்ஸ் பிரிகேட் அமைப்பு உரிமைகோரியுள்ளது. கடந்த நான்கு மாதங்களின் பின்னர் இஸ்ரேலில் நடந்த முதலாவது தாக்குதல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் இத்தாக்குதலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் - சர்வதேச நீதிமன்றம், இஸ்ரேல் அமைக்கும் தடுப்புச் சுவரை நீக்குமாறு தீர்ப்பளித்தபின் நடந்த இந்தத் தாக்குதல் எதைக் காட்டுகின்றதென்றால், பலஸ்தீன கிளர்ச்சியாளர்கள் இஸ்ரேல் மீது தாக்குதலை நடத்த நீதிமன்றின் தீர்ப்பு தூண்டுதலாக அமைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

## உலக நோக்கு

## ஆப்கானில் நடந்த தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் உயிரிழப்பு



(ஹேரத்)

ஆப்கானின் மேற்குப் பகுதியான ஹேரத் நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பலர் படு காயமடைந்தனர்.

ஹேரத் நகரிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அருகிலேயே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார். இந்தக் குண்டுத் தாக்குதல் சைக்கிள் ஒன்றில் வைத்தே நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் குறித்த முழுமையான சேத விபரங்கள் தெரிய வராதபோதும் சிறுவன் ஒருவன் உட்பட ஐவர் கொல்லப்பட்டதாகவும், இவர்கள் அனைவரும் பொதுமக்களெனவும் வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவித்தனர்.

குண்டுவெடிப்பு இடம்பெற்றவேளை உள்ளூர் அரச அதிகாரிகளும், அமெரிக்க கூட்டணிப் படைகளின் பிரதிநிதிகளும்- ஹேரத் நகரின் வேறொரு இடத்தில் ஆயுதங்கள் கையளிப்பு நிகழ்வொன்றில் பங்குபற்றிக் கொண்டிருந்தனர்.

இந்தக் குண்டுத் தாக்குதல் தலிபான் போராளிகளாலேயே நடத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுமக்கள் அனைவரும் தம்மிடமுள்ள ஆயுதங்களைக் கைவிட வேண்டுமெனக் கோரிக்கைவிடுத்ததுடன், இதன் மூலம் கடந்த ஒரு தசாப்த காலமாக இடம்பெற்றுவரும் போரை முடிவுக்குக் கொண்டுவர முடியுமெனவும் ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கான் அரச அதிகாரிகளின் இந்த அறிவிப்பு அரச வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. இது காபூலில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமாகும்.

ஆப்கானில் நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டு, அங்கு இடம்பெற்றுவரும் வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள், கிளர்ச்சியாளர்களின் தாக்குதலினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த வருடம் ஜூன் மாதம் நடைபெறவிருந்த ஆப்கானின் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் மீளவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதன்படி ஜனாதிபதித்தேர்தல் - எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஒன்பதாம் திகதியும், நாடாளுமன்றத் தேர்தல் - அடுத்த வருடம் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் இடம்பெறும் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

## ஈராக்கிலிருந்து தமது படைகளை விலக்க பிலிப்பைன்ஸ் அரசாங்கம் தீர்மானம்



(பிலிப்பைன்ஸ்)

பிலிப்பைன்ஸ் - தனது நாட்டுப் படைகளை ஈராக்கிலிருந்து விலக்காவிட்டால் கடத்தப்பட்ட அந்த நாட்டுப் பிரஜை சிரச்சேதம் செய்யப்படுவாரென, இஸ்லாமியப் போராளிகள் எச்சரிக்கை விடுத்ததையடுத்து பிலிப்பைன்ஸ் தனது நாட்டுப் படைகளை ஈராக்கிலிருந்து விலக்க முடிவுசெய்துள்ளது.

பிலிப்பைன்ஸ் அரசின் இந்த அறிவிப்பையடுத்து இஸ்லாமியப் போராளிகளால் கடத்தப்பட்ட அஞ்ஞலோ டி லா குறூஸ் விடுதலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அஞ்ஞலோ டி லா குறூஸ் (வயது 46) வாகனச் சாரதியாக சவுதியில் தொழில் புரிந்துவருபவர். இவரைக் கடத்திய ஆயுததாரிகள், பிலிப்பைன்ஸ் அரசாங்கம் ஈராக்கிலிருந்து தனது படைகளை 24 மணித்தியாலத்துக்குள் விலக்குவதாக அறிவிக்கவேண்டும் எனவும், எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேற்றப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இவ்வாறு பிலிப்பைன்ஸ் அரசு செய்யத் தவறுமாக இருந்தால் - கடத்தப்பட்டு தமது காவலில் வைக்கப்பட்டவர் சிரச்சேதம் செய்யப்படுவார் எனவும் எச்சரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து பிலிப்பைன்ஸ் அரசு ஈராக்கிலுள்ள தமது படைகளை விலக்குவதாகத் தெரிவித்தது. ஆனால், ஆயுததாரிகளின் கோரிக்கைக்கு அடிபணிந்து தாம் இந்த முடிவை எடுக்கவில்லையெனவும் ஏற்கனவே தம்மால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் பிலிப்பைன்ஸ் தெரிவித்தது.

பிலிப்பைன்ஸ் அரசின் இந்த அறிவிப்பையடுத்து கடத்தப்பட்ட குறூஸ் விடுதலை செய்யப்பட்டதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை தமது நாட்டுப் பிரஜைகள் இருவர் ஈராக்கில் வாகனச் சாரதிகளாக பணிபுரிந்தவேளை - இஸ்லாமிய ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கான காலக்கெடு முடிந்த பின்னரும் அவர்கள் உயிருடன் இருப்பதாகவும் பல்கேரிய அரசு தெரிவித்தது.

இந்த இருவரையும் விடுதலை செய்யும் முயற்சியில் ஈடுபட தமது இராஜதந்திரிகளை ஈராக்கிற்கு அனுப்பியுள்ளதாக பல்கேரிய வெளிநாட்டமைச்சு தெரிவித்தது.

## ஈராக்கில் இடம்பெற்ற வீதிவிபத்தில் 4 அமெரிக்கப் படையினர் பலி

ஈராக்கின் மேற்குப் பகுதியிலுள்ள அன்பர் மாகாணத்தில் இடம்பெற்ற வீதிவிபத்தில் நான்கு கடற்படையினர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட நால்வரும் அமெரிக்கக் கடற்படையின் முதலாவது படைப் பிரிவினைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து சனி முஸ்லிம்கள் வாழும் பிரதேசமான பலூஜாவிற்கு அருகில் இடம் பெற்றது.

ஈராக்கில் கிளர்ச்சியாளர்களுக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையில் இடம் பெற்ற மோதல்களிலும் மற்றும் வீதி விபத்துக்களிலும் இதுவரை 900 அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா - ஈராக்கிற்கான இடைக்கால அரசை வழங்கிய பின்னரும், அந்த நாட்டுப் படையினர் மீது தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

## காஸாவில் நடந்த தாக்குதலில் நான்கு ஆயுததாரிகள் உயிரிழப்பு!



(காஸா)

பலஸ்தீனத்தின் காஸா நகரில் இடம் பெற்ற வெடிவிபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளதாகப் பலஸ்தீன வைத்தியர்கள் தெரிவித்தனர்.

காரில் சென்ற மூவரும், மோட்டார் சைக்கிளில் சென்ற மற்றொருவருமே கொல்லப்பட்டதாகவும், காரில் சென்றவர்கள் ஆயுததாரிகளெனவும், மோட்டார் சைக்கிளில் சென்றவர் ஹமாஸ் அமைப்பின் உறுப்பினரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

காரில் பயணம் செய்த மூவரும் - பிரபலமான பல அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்படும் அமைப்பின் உறுப்பினர்களென பலஸ்தீனப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொல்லப்பட்டவர்களின் உடல்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும், அந்த உடல்கள் அடையாளம் காணமுடியாதவாறு சிதைவடைந்துள்ளதாகவும், இதனால் - சடலங்களை அடையாளம் காண்பது சிரமமெனவும் வைத்தியசாலைப் பணிப்பாளரான இப்ராஹிம் அல் மஷ்டார் தெரிவித்தார்.

காஸாவில் சென்று கொண்டிருந்தவர்கள் மீது, அபாச்சி ஹெலிகொப்ரர் தாக்குதலை மேற்கொண்டபின்னர், இஸ்ரேலிய டாங்கிகள் தாக்குதலை நடத்தியதனால் கார் முழுமையாகச் சேதமடைந்ததாகப் பலஸ்தீனப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பான விபரத்தைத் தாம் பரிசோதனை செய்யவுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சர்வஜன வாக்களிப்பு நிலையிலிருந்து பொதுமக்கள் விலகிச் செல்கின்றனர்!

## மாகாணசபை தேர்தல் முடிவுகள் குறித்து ஐ.தே.க. அறிக்கை

நாடாளுமன்றத் தேர்தலிலும பார்க்க பலம் மிக்க ஆணை ஒன்றைத் தமக்கு வழங்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் விடுத்த வேண்டுகோள், மக்களால் நிராகரிக்கப்பட்டிருப்பதை நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் வெளியான முடிவுகள் உணர்த்துவதாக ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இந்த மாகாணசபைத் தேர்தலின் மூலம் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செயவதற்கு ஏனைய அரசியல் கட்சிகள் நடவடிக்கை எடுத்தன.

ஆனால், அரசாங்கம் இந்தத் தேர்தலை இரண்டாவது பொதுத்தேர்தலாகக் கருதிச் செயற்பட்டது.

பொதுத்தேர்தலிலும் பார்க்க, மாகாணசபைத் தேர்தல் மூலம் தமக்கு கூடுதல் பலத்தை வழங்குமாறு அரசு கோரியிருந்தது.

எனினும், பொதுத்தேர்தலில் அவர்களுக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் மாகாணசபைத் தேர்தலில் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் நடைபெற்ற பல்வேறு தேர்தல்களிலும் பார்க்க இந்தமுறை நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலிலேயே மிகக்குறைந்தளவு வாக்குகள் பதிவாகியிருக்கிறது.

ஜனாதிபதியினதும், ஜே.வி.பியினதும் வாக்குறுதி அரசியல் காரணமாக, சர்வஜன வாக்களிப்பிலிருந்து மக்கள் விலகிச்செல்லும் நிலை தோன்றியிருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லக்ஸ்மன் கதிர்காமர் பிரித்தானியா பயணம்!

(கொழும்பு)



வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் பிரித்தானியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்.

அங்கு தங்கியிருக்கும் காலப்பகுதியில் அவர் பிரித்தானிய வெளி விவகார அமைச்சர் ஜக்ஸ்ரோவைச் சந்தித்து பேசவிருப்பதாகத் தெரியவருகிறது.

இவரது விஜயம் குறித்து உத்தியோகபூர்வத் தகவல்கள் வெளிவராதபோதும், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் இவரைக் கௌரவிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தைக் கையேற்ற பின்னர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கொண்டுள்ள 5 ஆவது விஜயமாக இது அமைந்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விதிகளுக்கமைய அமைச்சரவையைச் சேர்ந்த எந்த ஒரு அமைச்சரும் வருடம் ஒன்றிற்கு 4 தடவைகளே வெளிநாடுகளுக்குப் பயணிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# டக்ளஸின் உதவியுடன் கருணா பி.பி.சிக்கு பேட்டி!

தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டு தலைமறைவாக வாழ்ந்துவரும் கருணா, ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளரும், அமைசசருமான டக்ளஸ் தேவானந்தாவின் மூலம் பி.பி.சியின் தமிழோசைக்கு நேற்று பேட்டியொன்றை வழங்கினார்.

இவரது பேட்டியில் - தாம் கிழக்கிலிருந்து தப்பிச்செல்வதற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாகிர் மௌலானா உதவியமை, தான கொழும்புக்குச் சென்று பல அரசியற் தலைவர்களைச் சந்தித்ததுடன், புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளமை பற்றிக் குறிப்பிட்டார்.

இதேவேளை - டக்ளஸ் தேவானந்தாவுடன் இன்று வரை தான் நெருக்கமான உறவு கொண்டிருப்பதையும் நேற்றைய பி.பி.சியின் பேட்டியில் கருணா உறுதிபடத் தெரிவித்தார்.

## 6 மாகாண...

மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதுடன், ஏனைய இரண்டு மாகாணங்களின் ஆட்சியும் ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இந்த நிலையில் இலங்கையின் எட்டு மாகாண சபைகளில் செயலிழந்து காணப்படும் வடக்கு - கிழக்கு மாகாண சபையைத் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாண சபைகளும் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

வடமத்திய மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 20, ஐக்கிய தேசியக் கட்சி 10, முஸ்லிம் காங்கிரஸ்1 என்ற வகையில் ஆசனங்களைப் பெற்றுள்ளன.

ஊவா மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 19, ஐக்கிய தேசியக் கட்சி 12, மலயக மக்கள் முன்னணி 1 என்ற வகையில் ஆசனங்களைப் பெற்றுள்ளன.

தென் மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 26, ஐக்கிய தேசியக் கட்சி 15, என்ற வகையிலும்,

சப்ரகமுவ மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 26, ஐக்கிய தேசியக் கட்சி 15, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 1 என்ற வகையிலும் ஆசனங்களைப் பெற்றுளளன.

மேல் மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 57, ஐக்கிய தேசியக் கட்சி 39, முஸ்லிம் காங்கிரஸ் 4, மேல் மாகாண மக்கள் முன்னணி 1, ஜனநாயக ஐக்கிய முன்னணி 1 என்ற வகையில் ஆசனங்களைப் பெற்றுள்ளன.

மத்திய மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 28, ஐக்கிய தேசியக் கட்சி 26, மலயக மக்கள் முன்னணி 2 என்ற வகையில் ஆசனங்களைப் பெற்றுள்ளன.

கடந்த பொதுத் தேர்தலில் பதுளை மாவட்டத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி 3 உறுப்பினர்களை நாடாளுமன்றம் அனுப்பியிருந்த போதிலும் இந்த முறை மாகாண சபைத் தோதலில் மாவட்டத்தின் கட்டுப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆனையிறவு....

யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துக் குறித்த விசாரணைகளை தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (34)

## கந்தரோடை....

எதிரே வந்த மேட்டார் சைக்கிளும், லொறியும் மோதிக் கொண்டதிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

## பாதுகாப்பை....

பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது,

கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, மீண்டும் புலிகள் என்னைக் குறிவைக்கக் கூடும்.

புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுடன் தொடர்பு வைத்திருப்பதன் காரணமாக பாதுகாப்பாக இருக்கும்படி ஜனாதிபதி சந்திரிகாவும் ஆலோசனை கூறியிருக்கிறார்.

ஆயினும், கூடுதல் பாதுகாப்பு வழங்குமாறு படைத்தரப்பிடம் ஏற்கனவே விடுக்கப்பட்ட கோரிக்கை உதாசீனப்படுத்தப்பட்டது. இதனால், இந்த விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகாவை நேரடியாகத் தலையிட வேண்டும் எனக் கோரியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விசேட ஆங்கில பரீட்சை முடிவுகள் வெளியாகின!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் சித்தியடையாத காரணத்தால் கடந்த வருடம் பட்டம் பெறத்தவறியோரின் விசேட ஆங்கிலப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் பெறுபேறுகளின்படி அனேகர் சித்தியடைந்திருப்பதாக யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. ஆங்கிலப் பாடம் சித்தியடையாத காரணத்தினால் 300 பேர் வரையில் பட்டம் பெறத் தவறியிருந்தனர்.

இவர்களுக்கென விசேட ஆங்கிலப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டிருந்தது. அதற்கான பெறுபேறே கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் சித்தியெய்திய மாணவர்களுக்கான அறிக்கைகள் வழங்கப்பட்டு வருகின்றது. எனினும், பட்டச் சான்றிதழ்கள் அடுத்து நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவின் பின்னரே வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தங்காலை சிறையில் 6 கைதிகள் தப்பினர்!

தங்காலை சிறையிலிருந்து நேற்று ஆறு கைதிகள் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் சிறையிலிருந்து தப்பிச்சென்றுள்ளதாகவும் இவர்கள் வீரகட்டிய வனப் பிரதேசத்தில் மறைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களைக் கைதுசெய்வதற்காக மூன்று பொலிஸ் குழுக்களை அனுப்பிவைத்திருப்பதாக தங்காலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்தார்.

இவர்கள் வீரகட்டிய பகுதிவரை முச்சக்கரவண்டியில் சென்று அதனை வீதியில் விட்டுவிட்டு காட்டினுள் தலைமறைவாகியுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஈ.பி.டி.பி....

பதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து - தேடுதல் நடத்தப்பட்டதென்றும் ஆனால், எவரும் கைது செய்யப்படவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யுத்த...

நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையினை எடுக்கவேண்டும்.

அது சம்பந்தமாக படைத்தரப்பு ஆக்கபூர்வமாக எந்தவித நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

படுகொலைகளுக்கும் வன்முறைகளுக்கும் காரணமானவர்களையும், அவர்கள் ஆயுதங்களோடு நடமாடுகின்ற நடவடிக்கையினை கொழும்பிலும் சுதந்திரமாக அனுமதிப்பது ஏற்கனவே அறிந்த உண்மை.

பலர் கருணாவின் பிடியில் இருந்தும், இராணுவப் புலனாய்வின் ஆதரவில் இருந்தும் தப்பிவந்து பல விடயங்களை முன்வைத்திருக்கின்றனர். ஆகவே இதன் எதிரிகளாக - இதோடு மிக நெருக்கமாக சம்பந்தப்படுத்திய நிகழ்வாகவே கொழும்பு குண்டுவெடிப்புச் சம்பவத்தை பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புறாவ் ஹொவ்டே..

ஆகியன குறித்து ஆழமாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

கருணாவுக்கும் அரசுக்கும் இருக்கும் தொடர்புகள் குறித்தும் புலிகள் தமது நிலைப்பாட்டைக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறியதுடன், போர்நிறுத்த உடன்பாட்டைக் கடைப்பிடிப்பதில் தமக்கு இருக்கும் பொறுப்புக்களை வலியுறுத்தியதாகவும் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக அரசாங்கத் தரப்புடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே ஆராயவிருப்பதாகவும் தெரியவருகிறது.

கடந்த புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவத்தையடுத்து - அரசாங்க சமாதானச் செயலக உயர்மட்ட அதிகாரிகளுடன் கடந்த வெள்ளியன்று கண்காணிப்புக் குழுத் தலைவர் புறூவ் ஹொவ்டே சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விசர் நாய் கடித்து சிறுமி உயிரிழப்பு!

(புதுக்குடியிருப்பு)

விசர்நாய்க் கடிக்கு இலக்கான சிறுமி ஒருவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த நீக்கிளஸ் மேரி அனுஷா என்ற 13 வயதுச் சிறுமியே உயிரிழந்தவராவார்.

## சமாதான...

எப்போது இடம்பெறும் என்பது குறித்து இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் செய்திகள் தெரிவித்தன.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை வந்து ஜனாதிபதி சந்திரிகா மற்றும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

ஆயினும் இந்தச் சந்திப்புக்களில் சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதிப்பாதுகாப்பு...

அத்துடன், வலி. வடக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதி, முன்னரங்க காவலரண் பகுதிகளுக்கும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க விஜயம் செய்வார்.

காங்கேசன்துறை முகாம், காரை நகர் கடற்படைத் தளம் ஆகியவற்றுக்கும் இவர் விஜயம் செய்து அதிகாரிகள் மற்றும் படையினருடன் கலந்துரையாடுவார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுடன் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப்படைத் தளபதி வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி லெப் ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோரும் யாழ்பாணம் வரவுள்ளனர்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும், இராணுவத் தளபதியாக பொறுப்பேற்ற பின்னர் லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொடவும் முதல்முறையாக யாழ்ப்பாணம் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை
ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறிக்கு பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

தமிழீழப் பிரதேச பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள "ஆங்கில ஆசிரியர் கற்கை பயிற்சிநெறிக்கு" பல்கலைக்கழக பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சி நெறி முற்றிலும் இலவசமானது.
பயிற்சிக்காலத்தின்போது கொடுப்பனவுகளும் வழங்கப்படும்
பயிற்சிக் காலம் : 06 மாதங்கள்

விண்ணப்ப முடிவுத்திகதி 31.07.2004

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறி" எனக் குறிப்பிட்டு விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை உரிய திகதிக்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றோம்.

தொலைபேசி இல: 021 222 3942
021 222 3768

தலைவர்
தலைமைச் செயலகம்
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை
பரமேஸ்வரா சந்தி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

(781)

அரியசந்தர்ப்பம்!
யாழ். நகரில் BRITISH ENGLISH கற்கலாம்!
SPOKEN & ENGLISH GRAMMAR
+குறுகிய காலத்தில் ஆங்கிலம் பேச, வாசிக்க, எழுத கற்கலாம்.
+வெளிநாடு செல்பவர்களுக்கு விசேட தினசரி வகுப்புக்கள்.
+உத்தியோகத்தர்களுக்கு விசேட சனி~ஞாயிறு வகுப்புக்கள்.
+TOEFL - IELTS வகுப்புக்கள்.
முன்கூட்டியே பதிவு செய்யவும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
GRAMMAR - EXCERCISES - READING - ESSAYS - LETTERS - TRANSLATION - SUMMARY - ETIQUETTE (MANNERS)- VIDEO LESSONS PRINTED LESSONS + EXCERCISES

LECTURES BY:
Mr.A. RAJAGOPALAN Mr.B. RUBAN
Mr. SAM Ms. YASODARA

ஆரம்பம:- 17.07.2004

UNIVAC COLLEGE
(AFFILIATED TO BANGALORE UNIVERSITY)
No.527 - K.K.S.ROAD, JAFFNA.
(MILKWHITE BUILDING)

(சி/2719)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.